# புகார்

[காவிரிப்பூம் பட்டினம்]



ஜி. எஸ். விச்வா & கம்பெனி
திருவல்லிக்கேணி, சென்னை.

19/8/48

...DURA TAMIL SANGAM

# புகார்

## (காவிரிப்பூம் பட்டினம்)

ஆசிரியர் :

சிதம்பர முத்துராமன்

பிரசுரகர்த்தர் :

ஜி. எஸ். விச்வா & கம்பெனி

திருவல்லிக்கேணி, சென்னை.

பதிப்புரிமை]

[விலை 1—8—0

முதற் பதிப்பு 1947.
இரண்டாம் பதிப்பு 1948.

THE MADURA
THE MADU
SANGAM

Printed at the Sadhu Press, Madras - 14

# நூன்முகம்

காவிரியின் கழிமுகத்தில் கவினுற விளங்கிய நகரம் புகார். புகாரைப் புகழும் நூல்கள் பல; எனினும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு நூல்களும், பட்டினப்பாலை என்னும் பெரும்பாடலும் அந்நகரத்தைப் பற்றிய செய்திகளை விரிவுறக் கூறுகின்றன. அவற்றின் வாயிலாக அந்நகரத்து அமைப்பையும், அழகையும், மக்களின் பழக்க வழக்கங்களையும், வாணிகச் சிறப்பையும் நன்கு உணரலாம். ஏறக்குறைய பதினெட்டு நூற்றாண்டுகட்கு முன்னர் விளங்கிய இந்நகரம் நாகரிகத்தில் சிறந்து இருந்த செய்தி பெருவியப்பை அளிக்கின்றது.

புகாரைப் பற்றிய செய்திகள் எல்லாவற்றையும் தொகுத்து, மாணவர் மனங்கொள்ளும் வகையில் வரலாறுகளை இணைத்து இச்சிறு நூல் எழுதப்பட்டுள்ளது. அந்நகரத்து வரலாறுகள் யாவும் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன. உயர்நிலைப் பள்ளி மாணவர்கட்குத் துணைப்பாட நூலாக இருப்பதற்கு இயையுமாறு இந்நூல் எளியநடையில் அமைந்துள்ளது. இச்சிறு நூலைத் தமிழ் மாணவர் உலகமும், தமிழறிஞர் உலகமும் உவந்து ஏற்கும் என்பது என் நினைவு.

ஆசிரியன்.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வேறு பெயர்கள் | ... | 1 |
| 2. | இரு பெரு வரலாறுகள் | ... | 8 |
| 3. | இரு பெரும் பிரிவுகள் | ... | 23 |
| 4. | ஐவகை மன்றம் | ... | 31 |
| 5. | ஐவகை வனம் | ... | 40 |
| 6. | வீதிக்காட்சி | ... | 49 |
| 7. | இந்திர விழா | .... | 53 |
| 8. | வாணிகம் | ... | 65 |
| 9. | பலவகைத் தொழில்கள் | ... | 70 |
| 10. | கற்புடை மகளிர் | ... | 74 |
| 11. | முடிவு | ... | 90 |

# புகார்

## 1. வேறு பெயர்கள்

நமது செந்தமிழ் மொழியைச் செழிப்புற வளர்த்தவர்கள் முடி மன்னவர் மூவராவர். அவர்கள் சேரர், சோழர், பாண்டியர் எனப்பட்டனர். அவர்களுள் சோழமன்னர்கள் சோழ நாட்டை ஆண்டு வந்தனர். கடைச் சங்க காலத்தில் சோழ நாட்டிற்குப் புகாரும், உறையூரும் தலைநகரங்களாக விளங்கின. "ஊரெனப் படுவது உறையூர்" என்று உறையூர் புலவர்களால் புகழப் பெற்றது. புகாரோ அக்காலத்து நகரங்களின் முன்னணியில் நின்றது என்றே கூறலாம். இந் நகரத்தைப் பற்றிய சிறப்பைச் சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டில் பட்டினப்பாலை என்னும் சங்க நூல்கள் பரக்கக் கூறுகின்றன. எனவே புலவர் பாடும் புகழ் பெற்றது புகார் என்று கூறுதல் பொருத்தமுடைத்து.

"சோழவளநாடு சோறுடைத்து" என்று ஆன்றோரால் புகழப் பெற்ற சோழநாட்டை வளப்படுத்தியது காவிரியாறே ஆகும். காவிரியாறு பாய்ந்து சோழநாட்டைச் செழிக்கச் செய்தது. ஆதலால் சோழநாட்டை "காவிரியின் நன் கொடை" என்று கூறுதல் இயையும். இவ்

வாறே இக்காலத்தில் ஆப்பிரிக்காவில் உள்ள எகிப்து தேசத்தை "நைல் நதியின் நன்கொடை" என்று கூறுவதுண்டு. சோழ நாட்டை நீர் நாடாக்கிய காவிரி யாற்றின் பெருமையைப் பழந் தமிழ் நூல்கள் பரக்கக் கூறுகின்றன.

'மேகம் மழை பெய்ய மறந்தாலும் தான் மறவாது நீரைக் கொண்டு ஓடி வருகின்ற காவிரி' என்று காவிரியைப் புலவர் ஒருவர் புகழ்ந்துள்ளார். சூரியன் நான்கு திசைகளில் காணப்பட்டாலும், வெள்ளிமீன் தென்புலம் சென்றாலும் நாட்டில் மழைவளங் கரந்து பயிர் விளைவு குன்றும் என்று ஆன்றோர் கூறுவர். இத்தகைய தீய நிமித்தங்கள் நிகழினும் காவிரி யாற்றில் நீர் வருதல் தவறாது. அது பல கால்களாகப் பிரிந்து பாயும். எனவே, சோழ நாட்டைக் காப்பது காவிரியே என்பது கண்கூடாகும்.

காவிரியாறு கடலொடு கலக்கும் இடத்தில் அமைந்திருந்த நகரமே நாம் இப்பொழுது ஆராய எடுத்துக்கொண்ட நகரமாகும். நமது பழந் தமிழர்கள் நூலறிவும், உலகியலறிவும் பெற்று விளங்கினர். ஆதலின், அவர்கள் பல பொருள்களுக்குக் காரணங் கருதியே பெயரிட்டனர். காரணங்கருத இயலாவிடின் இடுகுறிப்பெயரை இட்டனர். இந் நகரத்திற்கும் அவர்கள் பல பெயர்களை இட்டிருந்தனர். அவை இடப்பெற்ற வரலாறுகளையும், காரணங்களையும் நாம் முதலில் நோக்குவோம்.

புகார் என்ற சொல்லிற்கு 'ஆற்று முகம்' என்பது பொருளாகும். "புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்" என்ற புறநானூற்று அடிக்கு

"ஆற்று முகத்துப் புகுந்த பெரிய மரக்கலம்" என்று புறநானூற்று உரையாசிரியர் பொருள் எழுதியுள்ளார். காவிரியாறு கடலொடு கலக்கும் ஆற்று முகத்தில் இந்நகரம் அமைந்திருந்ததாக லின் இது புகார் எனப்பட்டது. இனிப் புகார் என்பதற்கு 'புகமாட்டார்கள்' என்று பொருளுரைப்பர் சிலர். புகாரில் வாழ்ந்த மக்களுக்கு எல்லாப் பொருள்களும் மிகுதியாகக் கிடைத்தன. ஆதலின், அவர்கள் ஒருபொருள் கருதி வேறு நாட்டிற் புகமாட்டார்கள். அக் கருத்தினை விளக்குதற் பொருட்டு 'புகார்' என்று பெயர் வந்தது என்பதே அவர்கள் கூறும் காரணம் ஆகும். இவற்றுள் முதலில் கூறிய பொருள் சிறப்புடைத்து என்று கொள்ளுதல் தகும். பின்னர்க் கூறியது வலிந்து பொருள் கொள்ளக் கிடக்கின்றது.

இந் நகரத்தைப் பூம்புகார் என்றே ஆசிரியர்கள் பலர் புகழ்கின்றனர். பூக்களால் அழகுற விளங்கும் புகார் என்பதே அதன் பொருளாகும். 'கா' என்பதற்குச் சோலை என்பது பொருள். 'விரி' என்பதற்கு விரித்துக் கொண்டு செல்வது என்பது பொருளாகும். காவிரியாறு தான் செல்லும் இடங்களில் எல்லாம் சோலைகள் விரித்துக் கொண்டே செல்கின்றது. ஆதலின் அத்தன்மையைக் கண்டு இறும்பூது எய்திய பழந்தமிழர்கள் அக் கருத்தினை உட்கொண்டு 'காவிரி' என்று அந்த ஆற்றிற்குப் பெயரிட்டனர். இஃது உண்மை என்பதை இந்நாளிலும் காணலாம். திருச்சி, தஞ்சை ஜில்லாக்களில் காவிரியின் கரை

வழியே செல்கின்றவர்கள் அதன் இருபுறங்களி லும் வானுற வோங்கி வளர்ந்துள்ள மரங்களைக் கண்டு களிப்பெய்துவர். வாழை மரங்கள் தென்னை மரங்களைப் போல உயர்ந்தும் பருத்தும் காணப்படும். அன்றியும் பலவிதப் பூக்கள் பூத் திருப்பதையும் காணலாம். எனவே காவிரி கட லொடு கலக்கும் ஆற்று முகத்தில் பூக்கள் மிகுதி யாக விளங்கிக் காண்போர் கண்களைக் கவர்ந் தமை உண்மையாகும். அவ்வாறு பூக்களால் அழகு பெற்ற அந்நகரம் ‘பூம்புகார்’ என்று அழைக்கப்பட்டது.

இந்நகரத்தின் பழம் பெயர் சம்பாபதி என்ப தாகும். நமது தேசத்தைப் பழங்காலத்தில் சம் புத் தீவு என்று அழைத்தனர். சம்பு என்பது நாவல் மரம் ஆகும். நாவல் மரங்கள் மிக்கிருந் தமை பற்றிச் சம்புத் தீவு என்று வழங்கினர். சம்புத் தீவைக் காவல் புரிந்து வந்த பெண் தெய் வத்திற்குச் சம்பாபதி என்பது பெயர். இவள் சம்பு மரத்தின் கீழிருந்து தவஞ் செய்தனள் என்று கூறப்படுகிறது. மேரு மலையில் இருந்த இவள் புகார் புகுந்து நோற்றனள் என்பர். செந் நிறமும், விரிசடையும் உடையவளாக இவள் சிறப்பிக்கப்படுகின்றாள். அவ்வாறு புகாரில் அத் தெய்வம் தங்கியிருந்து, அந் நகரைக் காவல் புரிந் தமையின் அந்நகரத்திற்கு அத் தெய்வத்தின் பெயர் இடப்பட்டது.

இவ்வாறு சம்பாபதி என்று சிலகாலம் அந் நகரம் அழைக்கப் பெற்றது. அந்நாளில் காந்த மன் என்ற சோழ அரசன் ஒருவன் சோழ

நாட்டை ஆண்டு வந்தான். அவன் அகத்திய முனிவரிடத்தில் அதிக அன்பு கொண்டு அவரை வழிபட்டு வந்தான். அவன் தன் சோழ நாட்டை நீர் நாடாக்க எண்ணி, அதன் பொருட்டு அகத்தியரை வேண்டினான். அவனது வேண்டுகோளுக்கிரங்கிய அகத்தியர் தமது கரத்திலிருந்த காவிரியை ஆறாக ஓடுமாறு செய்து சோழ நாட்டை வளப்படுத்தினர். அவ்விதம் அகத்தியர் அருளால் பெருகிய காவிரியாறு சம்பாபதியின் அருகில் வந்தது. அவ்வாறு பெருகி வந்த காவிரிப் பாவையைச் சம்பாபதித் தெய்வம் உவந்து எதிர் கொண்டு, அந் நகரத்தினுட் புகுந்து செல்லப் பணித்தது. அப்பொழுது, அத் தெய்வம் ' இது வரையில் இந் நகரத்திற்கு என் பெயர் இருந்தது. நீ புகுந்ததால் இனி இந் நகரத்திற்கு உன் பெயரை வைத்தேன். நீ வாழிய ' என்று காவிரிப்பாவையை வாழ்த்தியது. இவ்வாறு சம்பாபதி என்ற பழம் பெயரைக் கொண்டிருந்த நகரம் பிறகு காவிரி புகும் பட்டினம் என்றாகியது. நாளடைவில் காவிரி புகும் பட்டினம் காவிரிப்பூம் பட்டினம் என்று மருவியது.

ஆயின், சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோவடிகள் இந் நகரத்தை, "காவிரிப் படப்பைப் பட்டினம்" என்றும் குறிப்பிடுகின்றார். "காவிரியைத் தோட்டக் கூற்றிற்கு எல்லையாக உடைய பட்டினம்" என்று இதற்குச் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் பொருள் எழுதியுள்ளார். படப்பை என்ற சொல்லிற்குத் தோட்டக்கூறு என்பது பொருளாகும். தோட்

டங்களுக்குக் காவிரியாறு எல்லையாக இருந்தது. காவிரியின் நீர் வளத்தினால் தோட்டங்கள் செழித்து வளர்ந்தன என்பதே இவ்வடியின் கருத்தாகும். தோட்டங்கள் மிகுதியாக இருந்தன என்றால் அங்குப் பூக்கள் மிக்கிருந்தன என்பது சொல்லாமலேயே அமையும். எனவே, காவிரியின் வளத்தினால் அங்குப் பூக்கள் பூத்தன. பூம்புகார் என்று பெயர் வைத்ததற்கும், காவிரிப் பூம்பட்டினம் என்பதற்கும் தொடர்புள்ளமை நன்கு போதரும். ஆதலின், காவிரியின் பூவினால் சிறப்புப் பெற்ற பட்டினம் என்று கோடலும் பொருத்தமுடையதாகும். பட்டினம் என்பது கடற்கரையைச் சார்ந்த இடங்களுக்கு அமைந்த பொதுப் பெயராகும். இன்றும் நாகைப்பட்டினம், அதிராம் பட்டினம், சென்னைப் பட்டினம், மசூலிப் பட்டினம், விசாகப் பட்டினம் என்று கடற்கரை நகரங்கள் பெயர் பெற்றுள்ளன.

இனி இந்நகரத்திற்கு “காகந்தி” என்றும் வேறொரு பெயர் உண்டு. புகாரைக் காந்தமன் என்ற ஒரு அரசன் ஆண்டு வந்ததாக முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அவன் காந்தன் என்றும் காந்தமன்னவன் என்றும் அழைக்கப் பட்டான். பரசுராமர் அவ்வரசனுடன் போர் செய்ய வந்த காலத்தில் அவன் அவருடன் பொர அஞ்சினான் அது பொழுது துர்க்கையின் கட்டளைப்படி அவன் அவருடன் போர் செய்யாமல் வேற்றுருக் கொண்டு வேறிடத்தில் மறைந்திருந்தான். அது காலையில் அவனது காவற் கணிகையின் புதல்வனாகிய ககந்தன் என்ற ஒருவன் அந்நகரத்தை

ஆண்டுவந்தான். அவ்வாறு ககந்தனால் ஆளப்பட்ட அந்நகருக்கு ‘ காகந்தி ’ என்ற பெயர் வந்தது. இச்செய்தியை மணிமேகலை அடிகள் தெளிவுறக் கூறுகின்றன. இவ்வாறு காவிரிப் பூம்பட்டினம், காவிரிப்படப்பைப் பட்டினம், புகார், பூம்புகார், சம்பாபதி, காகந்தி என்ற பல்வகைப் பெயர்களைக் கொண்ட நகரத்தின் அமைப்பையும், மாண்பையும் இனி நோக்குவோம்.

## 2. இரு பெரு வரலாறுகள்

புகாரின் நகரமைப்பையும், பல வகை நிகழ்ச்சிகளையும் உணர ஆண்டு நிகழ்ந்த இரு பெரு வரலாறுகளை அறிதல் இன்றியமையாதது. அவ் வரலாறுகளின் வாயிலாகவே நாம் புகாரின் சிறப்பை அறிய இயல்கின்றது. அவற்றைக் கூறும் நூல்கள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஆகும். அந்நூல்களைப் பாடியோர் முறையே இளங்கோவடிகளும், மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரும் ஆவர். அவ்விருவரும் இவ் வரலாறுகள் நிகழ்ந்த காலத்திலேயே வாழ்ந்தவர்களாதலின் அவர்கள் கூற்றுக்களை மெய்யெனத் தேறலாம். அவ் வரலாறுகளுக்கும், அவ் வாசிரியர்களுக்கும் தொடர்பு இருந்தது. அன்னார் இருவரும் அக் காலத்து மக்களின் பழக்க வழக்கங்களையும், நடை யுடை பாவனைகளையும் நன்கு அறிந்திருந்தனர். புகாரின் சிறப்பை அவர்கள் நேரில் அறிந்தவர்கள் என்னலாம். இரு பெரும் புலவர்கள் தம் காலத்தில் நிகழ்ந்த இரு வரலாறுகளையும், அவற்றின் வாயிலாகத் தம் காலத்து மக்களைப் பற்றியும், நாடு நகரங்களைப் பற்றியும் கூறி யிருப்பது நாம் செய்த தவப்பயனே என்று சொல்லுதல் வேண்டும். இனி அவ்விரு வரலாறுகளையும் சுருங்க அறிவாம்.

சிலப்பதிகாரம் என்னும் நூலில் புகாரில் நிகழ்ந்த வரலாறு 'புகார்க் காண்டம்' என்ற பிரிவில் உரைக்கப் படுகின்றது. காவிரிப் பூம்பட்டினத்தில் பெருங்குடி வணிகர் குலத்தில் மாசாத்து

வான என்றும், மாநாய்கன் என்றும் பெயர் வாய்ந்த இரு வணிகச் செல்வர்கள் வாழ்ந்து வந்தனர். மாசாத்துவானுக்குக் கோவலன் என்ற பெயரமைந்த மகன் ஒருவன் இருந்தான். அவன் அறிவும், அருளும், வீரமும் மிகப் பெற்றுப் பதினாறாண்டு நிரம்பிய காளைப் பருவத்தனாய் இருக்குங்கால், அவனுக்கு மாநாய்கனின் மகளாகிய கண்ணகியைப் பெரியோர் மணஞ் செய்வித்தனர். கண்ணகி அது பொழுது பன்னிரண்டாண்டு நிரம்பப் பெற்றவளாய் அறிவும், உருவும், திருவும் பெற்று இலங்கினாள். அத் திருமணம் சிறந்த முறையில் புகாரில் நடைபெற்றது. அதனைச் சிலப்பதிகாரம் புனைந்துரைப்பதிலிருந்து பழந் தமிழர் திருமண முறைகளை நாம் தெள்ளிதின் உணரலாம். மணம் முடிந்த பின்னர்க் கோவலனும், கண்ணகியும் தனிமனை புகுந்து இல்லறம் நடாத்தினர். அவர்களிடம் இல்லறத்தார்க்கு இன்றியமையாதனவாய் அரும் பெருங் குணங்கள் யாவும் ஒருங்கே திரண்டு நின்றன என்று இளங்கோவடிகள் இயம்புகின்றார்.

இல்லறம் நடாத்துங்கால் கோவலன் கண்ணகியின் அழகைக் கண்டும், இசையைக் கேட்டும் இன்புறுவான். அவளது அறிவின் திறத்தை அறிந்து அக மகிழ்வான்; அவளைப் பலபடப் பாராட்டுவான்; அவளைப் பொன்னே என்றும், முத்தே என்றும், கரும்பே என்றும், தேனே என்றும், அமிழ்தமே என்றும், மணியே என்றும், புகழ்வான். இன்னவாறு அவ்விருவரும் மலரும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும்,

உடலும் உயிரும் போலவும், ஒரு உயிரைக் கொண்ட இருதலைப் பறவையைப் போலவும் ஒன்றுபட்ட கருத்தினராய் ஒழுகி வந்தனர்.

அக்காலத்தில் ஒரு நாள் ஆடலும், பாடலும், அழகும் ஒருங்கமைந்த மாதவி என்பாள், அந் நகரத்தரசனின் முன் தன் ஆடலை அரங்கேற்றிக் காட்டினாள். அதை மிகப் பாராட்டிய அரசன் அவளுக்குப் பல பரிசுகளை அளித்து அனுப்பினன். பரிசு பெற்ற மகிழ்ச்சியுடன் வீதியில் வந்து கொண்டிருந்த மாதவியை ஊழ்வினை வயத்தால் கோவலன் கண்டனன்; அவளை அடைய விரும்பினன் ; அதற்கானவற்றைச் செய்தனன் ; பல சொல்லி என் ? அன்று முதல் கோவலன் கண்ணகியை மறந்தான்; மாதவியைச் சிறிது காலம் கூடப் பிரிய ஆற்றுதவனாய் அவள் மனையிலேயே இருப்பானாயினன்.

கணவனைப் பிரிந்த கண்ணகி கடுந்துயரில் மூழ்கினாள். எனினும், அவள் கற்பிற் சிறந்த காரிகையாதலின் தன் கணவனின் செயலில் குற்றம் காணவில்லை. தன் தீவினைப் பயனே என்று கருதி விதியை நொந்து அவள் வாழ்ந்து வந்தாள்; அழகிய ஆடை அணிகளை வெறுத்தாள். மங்கல அணி ஒன்றே அவள் கழுத்தில் விளங்கியது. நுதலில் திலகம் இடுதலையும், கண்ணில் மை பூசுவதையும், கூந்தலில் நெய் அணிவதையும் அவள் அகற்றினாள்.

இவ்வாறு கண்ணகி துன்பக் கடலிலும், மாதவி இன்பக் கடலிலும் ஆழ்ந்திருந்த காலத்தே புகாரில் ஆண்டுதோறும் சிறப்புடன் நடத்தப்படுவதான இந்திர விழா கொண்டாடப்பட்டது.

அவ்விழவினைப் பின்னர் விளங்கக் கூறுவோம். இந்திர விழா இருபத்தெட்டு நாட்கள் நடைபெறும். இந்திர விழா முடிந்த மறுநாள் புகாரில் மக்கள் யாவரும் கடற்கரைக்குச் சென்று ஆடல் பாடல்களில் ஈடுபட்டு மகிழ்ந்திருத்தல் மரபாகும். அவ்வாறே கோவலனும், மாதவியும் தேரேறிக் கடற்கரையைச் சேர்ந்தனர் ; அங்குக் கடலில் மூழ்கி இன்புற்றனர் ; உணவு கொண்டு உவந்திருந்தனர்.

அது பொழுது மாதவி யாழினை எடுத்துப் பலவகை இசையினை எழுப்பினாள். அது கேட்ட கோவலன் மகிழ்ந்து அவ்யாழினைத் தன் கையில் வாங்கி யாழிசையுடன் தன் குரலிசையை இயைத்துப் பாடினான். அப்பாடல்கள் அகப்பொருள் துறை அமைந்தனவாக இருந்தன. அவற்றைக் கேட்ட மாதவி 'இவன் பிற மகளிரிடத்தில் விருப்புடையவனாய் இவ்வாறு பாடினான்' என்று கருதினாள்; உடனே அவன் கையிலிருந்த யாழைத் தன் கையில் வாங்கினாள் ; விளையாட்டாகத் தானும் பிற ஆடவன் ஒருவனிடம் அன்பு கொண்டவள் போல் பாடினாள். உண்மையில் கோவலனும் பிற மகளிரை மனத்திற் கருதி அவ்வரிப்பாடல்களைப் பாடினானல்லன். மாதவியும் வேறு குறிப்புடன் பாடினாளல்லள். கோவலன் உண்மையில் வேறு குறிப்புடன் பாடினான் என்றுஎண்ணிஅதற்குமாறாகவே மாதவி விளையாட்டாகப் பாடினாள். ஆனால் ஊழ்வினைப் பயனால் கோவலன் அவளைத் தவறாக எண்ணி வெறுத்தனன். அவ்வளவில் அவளைப் பிரிந்து அவன் கண்ணகியிருந்த தன் மனை புகுந்

தான். மாதவியும் கடற்கரையிலிருந்து தனித்துத் தன் மனை எய்தினாள்.

மாதவி கோவலனின் பிரிவினை ஆற்றாது அவனுக்கு வயந்த மாலையின் வாயிலாக ஒரு திருமுகத்தை அனுப்பினாள். அத் திருமுகத்தில் தன் தவறினைப் பொறுத்துத் தன்னிடம் வரும்படியாக அழகிய மொழிகளில் வரைந்திருந்தாள். வயந்த மாலை ஓலையைக் கோவலனிடம் கொடுப்ப, அவன் 'இதுவும் மாதவியின் சூதுகளில் ஒன்று' என்று கருதி ஓலையை மறுத்திட்டான். எனினும், 'மாதவி மாலை வாராராயினும் காலை அவரைக்காண்குவம்' என்று கருதி ஏங்கி இருந்தாள்.

அது காலையில் கோவலன் கண்ணகியைச் சேர்ந்தான்; தன் பிழைகளைப் பொறுக்குமாறு வேண்டினான்; மாதவியை நம்பித் தன் பொருள்களை இழந்தமையைக் கூறி வருந்தினான்; நாணி நின்றான். அதைக் கண்ட கண்ணகி, 'மாதவிக்கு இவர் மேலும் கொடுப்பப் பொருள் இன்மையால் இவ்வாறு கூறுகின்றார்' என்று எண்ணினாள். எனினும், தன் கணவன் விருப்பத்தையே தன் விருப்பமாக அவள் கொண்டவள் ஆதலின், அவனை நோக்கி, 'என்னிடம் இரு சிலம்புகள் உள; அவற்றைக் கைக்கொண்டருள்க' என்று தன் இரு சிலம்புகளையும் எடுத்து மகிழ்வுடன் கோவலனிடம் அளித்தாள். சிலம்புகளைப் பெற்ற கோவலன் 'யான் மதுரையைச் சேர்ந்து, இச் சிலம்பை முதலாகக் கொண்டு, வாணிகம் செய்து பொருளீட்டக் கருதியுள்ளேன்; நீயும் உடன் எழுக'

என்றான். கண்ணகியும் உடனே அதற்கு உடன்பட்டாள்.

கோவலனும், கண்ணகியும் புகார் மக்கள் யாரும் அறியாமல் அன்றிரவின் கடையாமத்தில் அந்நகர வாயிலைக் கடந்தனர். அவர்கள் காவிரியின் வடகரை வழியே நடந்து சென்றனர். வழியில் கவுந்தி என்னும் ஆருகத சமயத் தவ முதியோளை அவர்கள் கண்டனர். கவுந்தியடிகளும் மதுரைக்குச் செல்ல நினைத்திருந்ததால் மூவரும் மதுரை நோக்கிச்சென்று இடையில் அமைந்துள்ள உறையூரை அடைந்தனர். இதனுடன் சிலப்பதிகாரத்தில் புகார்க் காண்டம் முற்றுப் பெறுகின்றது.

அதன் பின்னர்க் கண்ணகியும் கோவலனும் மாதரி என்ற இடைக்குல மகளிடம் அடைக்கலம் புகுந்து தங்கியதையும், கோவலன் கள்வன் என்று குற்றம் சாட்டப்பெற்று இறந்ததையும், அது பொறாத கண்ணகி பாண்டியனின் முன் வழக்குரைத்ததையும், பாண்டியனும் அவன் மனைவியும் இறந்ததையும், மதுரை கண்ணகியின் சீற்றத்தால் எரிந்ததையும், கண்ணகி சேரநாடு சென்று மலை மீது ஏறிப் பதினான்கு நாட்கள் நோற்றுத் துறக்கம் புகுந்ததையும், தன்னொடு வந்த பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கோயில் அமைத்து வழிபட்டதையும் சிலப்பதிகாரம் விளங்கக் கூறுகின்றது.

இனிச் சிலப்பதிகாரக் கதையுடன் தொடர்பு கொண்ட மணிமேகலையின் வரலாற்றினை அறிவாம். கோவலனுக்கு மாதவியினிடம் பிறந்த மகள் மணிமேகலை ஆவாள். கோவலன் மாதவி

யைப் பிரிந்து மதுரை சென்று, பாண்டியனால் கொலையுண்டான். கண்ணகியின் கற்புத்தீயால் மதுரை எரிந்தது. கண்ணகி பதினான்கு நாட்கள் நோற்றுத் தன் கணவனைக் கண்டு சுவர்க்கம் புகுந்தாள். இச் செய்திகளைக் கேள்வியுற்ற மாதவி தன் இன்பங்களை வெறுத்துப் புத்தமதத்திற் சேர்ந்து பிக்குணியாயினாள். அது காலையில் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா கொண்டாடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் பட்டன. முரசறையும் முதுகுடிப் பிறந்தோன் யானை மீது ஏறி அமர்ந்து நகர் வலம் வந்து, திருவிழாக் காலத்தில் மக்களுடைய கடமைகளையும், நகரை எவ்வாறு அலங்கரிக்க வேண்டும் என்பதையும் விளக்கிக் கூறினான். பின்னர் இந்திர விழா நடைபெற்றது.

தான் தாயாகப் போற்றி வந்த கண்ணகிக்கும், தந்தையாகிய கோவலனுக்கும் நேர்ந்த துன்பம் மணிமேகலையின் நினைவுக்கு வந்தது. அவ்வளவில் அவளது கண்களிலிருந்து நீர் பெருகியது. அக் கண்ணீர் அவள் தொடுத்துக் கொண்டிருந்த மாலையை நனைத்தது. மாதவி அவள் கண்ணீரைத் துடைத்து, புத்ததேவன் பொருட்டுத் தொடுத்த மாலையில் கண்ணீர் படிந்து அதன் தூயதன்மை நீங்கிவிட்டதாதலின், மலர்வனம் சென்று வேறு தொடுக்கப் பூக்கொணருமாறு மணிமேகலைக்குக் கூறினாள். அது காலையில் ஆண்டு உடனிருந்த சுதமதி என்ற தோழி, மணிமேகலை மலர் கொய்ய தனித்துச் செல்லுதல் கூடாதென்று உட்கொண்டு அதனால் நிகழும்

திமையை விளக்கினாள். அதன் பின்னர் அவள் அந்நகரத்தில் இருந்த இலவந்திகை வனம், உய்யான வனம், சம்பாதி வனம், கவேர வனம் ஆகிய நான்கு வனங்களின் தன்மைகளை விரித்துக்கூறி அவ்விடங்களுக்குச் செல்லலாகாத காரணங்களையும் கூறினாள். இறுதியில் உவவனத்தின் தன்மையையும், அங்குள்ள பளிக்கறையின் இயல்பையும், அதனுள் புத்தபீடிகை அமைந்துள்ளதையும், அதன் தன்மையையும் எடுத்தியம்பி, மணிமேகலை அங்குச் செல்வதே தக்கது என்றும், தானும் உடன் செல்வதாகவும் நவின்றாள். அதன் பின்னர் மணிமேகலையும் சுதமதியும் மலர்வனம் சென்றனர். இவ்வனங்களின் இயல்புகள் பின்பு விரித்துக் கூறப்பெறும்.

மணிமேகலை மலர் வனம் சென்ற செய்தியை அவ்வூர் இளவரசனாகிய உதய குமரன் என்பான் உணர்ந்தான். அவன் மணிமேகலையை எவ்வாறேனும் மணம்புரிய விரும்பி இருந்தனன். ஆயின் அவள் தவத்திற் புகுந்தனள் என்பதை அறிந்து செய்வகை அறியாமல் இருந்தான். மணிமேகலையைக் கண்டு தன் விருப்பத்தை வெளியிட இதுவே ஏற்ற சமயம் என்று எண்ணி உதய குமரன் தன் தேரில் ஏறி உவவனம் சேர்ந்தான். உதயகுமரனது தேரொலி மணிமேகலையின் காதில் கேட்டது. உதயகுமரன் தன்னை மணக்க விரும்பியுள்ளான் என்பது மணிமேகலைக்குத் தெரியும். ஆகவே, அவள் அஞ்சி ஆண்டிருந்த பளிக்கறை மண்டபத்துள் புகுந்து உட்புறம் தாழிட்டுக் கொண்டாள். எனவே, உதயகுமரன் மணிமேகலையுடன்

பேச இயலவில்லை. சுதமதியே அவனுக்குப் பல நீதி மொழிகளை எடுத்துரைத்தாள். எனினும், உதயகுமரன் தன் உறுதியை விடுத்தானில்லை. பின்னொருமுறை மணிமேகலையைக் காணலாம் என்ற எண்ணத்துடன் திரும்பினான். பின்னர் மணிமேகலை பளிக்கறையிலிருந்து வெளி வந்தாள். அது பொழுது மாலைக்காலம் வந்தது. மணிமேகலையை உதயகுமரனிடமிருந்து காப்பாற்ற எண்ணிய மணிமேகலா தெய்வம் அவளை மயக்கி மணிபல்லவம் என்ற தீவிற்கு எடுத்துச் சென்று அங்கு விடுத்தது. பின்னர் அது திரும்பி வந்து தன் செய்கையைச் சுதமதியினிடம் சொல்லி மீண்டும் மணிபல்லவம் சேர்ந்தது.

மணிபல்லவத்தில் தனித்து விடப்பட்ட மணிமேகலை விழித்து எழுந்து பலவாறு புலம்பினாள். அதுபொழுது ஆங்கிருந்த புத்த பீடிகை அவள் கண்களுக்குத் தெரிந்தது. அப் புத்த பீடிகையை வணங்கினோர் தம் பழம் பிறப்பை உணர்வர். மணிமேகலை அப் பீடிகையை வணங்கித் தன் பழம் பிறப்பு வரலாற்றை அறிந்தாள். இப் பிறப்பில் இளவரசனாகப் பிறந்து தன்னை விரும்பிய உதயகுமரனே முற் பிறப்பில் இராகுலன் என்ற பெயருடன் தன் கணவனாக இருந்தவன் என்பதை உணர்ந்தாள். எனினும் இப்பிறப்பில் தான் மணஞ் செய்து கொள்ளுதல் கூடாது என்று கொண்ட உறுதியைத் தளர்த்துதல் தகாது என்ற முடிவுக்கு வந்தாள். பின்னர் மணிமேகலா தெய்வத்தின் அருளால் வேற்று வடிவம் கொள்ளவும், வானவழியே செல்லவும்,

ஊனெழிந்து இருக்கவும் உதவும் மூன்று மந்திரங்களை அறிந்தாள்.

அது போழ்து அத் தீவில் வாழ்ந்த தீவதிலகை என்பவளது நட்பு மணிமேகலைக்குக் கிடைத்தது. அவளது உதவியால் மணிமேகலை அங்கிருந்த ஒரு பொய்கையில் அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரம் இருப்பதை உணர்ந்தாள். அப் பாத்திரம் ஆபுத்திரன் என்பவனுக்குச் சிந்தா தேவி என்ற தெய்வத்தால் கொடுக்கப் பட்டதாகும். நாடு வறுமையுற்ருலும் அப் பாத்திரத்தில் இடைவிடாது அன்னம் வளர்ந்து கொண்டே இருக்கும். ஆபுத்திரன் அப் பாத்திரத்தை அத்தீவின் பொய்கையில் இட்டு, ஆண்டிற்கு ஒரு முறை தோன்றுமாறும், அருளுடைமனத்தோர் வரின் அவர் கையில் புகுமாறும் கூறிப் பட்டினி இருந்து உயிர் துறந்தான். அப் பாத்திரம் ஆண்டுதோறும் வைசாக சுத்த பூர்ணிமையன்று அப் பொய்கையின் மேலே வருவது உண்டு. மணிமேகலை அங்குச் சென்ற அந்நாள் அப்புண்ணிய நாள் ஆதலால் அப்பாத்திரம் பொய்கையின் மேல் வந்ததோடன்றி மணிமேகலையின் கையையும் அடைந்தது. அது கண்ட மணிமேகலை மகிழ்ந்து அப் பாத்திரத்துடன் வான் வழியே காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தாள்.

அமுத சுரபியில் முதலில் கற்பிற் சிறந்த மங்கையொருத்தி அன்புடன் அன்னமிட வேண்டும். அப்பொழுது தான் அப் பாத்திரத்திலிருந்து அன்னம் எடுக்க எடுக்கக் குறையாது. அதனுல் மணிமேகலை அவ்வூரில் கற்புடை மங்கை ஒருத்தியி

னிடம் பிச்சை வாங்க விரும்பினுள். அது பொழுது காய சண்டிகை என்ற வித்தியாதரப் பெண்ணொருத்தி மணிமேகலையிடம் அன்பு பூண்டு ஒழுகி வந்தாள். அவளுக்கு ஒரு பெருநோய் இருந்து வந்தது. அதனை யானைத் தீ என்பர். உண்ண உண்ணப் பெரும்பசி உண்டாவதே அந் நோயின் இயல்பு. மணிமேகலை கொண்டு வந்த அப் பாத்திரத்தின் உதவியால் தன் பசி நோய் நீங்கப் பெறலாம் என்ற கருத்துடனேயே அவள் மணிமேகலையுடன் நட்புப் பூண்டொழுகினுள். அமுத சுரபியில் கற்புடைய பெண்ணொருத்தி பிச்சையிட வேண்டும் என்பதை அவள் அறிந்து ஆதிரையினிடம் பிச்சை பெறுமாறு மணி மேகலையை அனுப்பினுள். மணிமேகலையும் ஆதிரை யின் இல்லிற்குச் சென்று பிச்சை கேட்க, ஆதிரை பிச்சையிட்டாள். அது முதல் மணி மேகலை மக்களின் பசிப்பிணியை ஒழிக்கத் தொடங்கினுள்.

அமுத சுரபியின் உணவுச் சிறப்பால் அதி லிருந்து வாங்கியுண்ட ஒரு பிடி உணவிலிருந்தே காயசண்டிகையின் யானைத் தீ என்னும் கொடு நோய் நீங்கிவிட்டது. அவள் மகிழ்ந்து மணிமே கலையை வணங்கித் தன் வரலாறு கூறினுள்; பின்னர் உலகவறவி என்ற அம்பலத்தில் அவளை இருக்குமாறு சொல்லித் தன் ஊர் சென்றனள். மணிமேகலை அவ்வாறே உலகவறவி புகுந்து யாவருக்கும் உணவளித்துப் பசிப்பிணி களைந்து வந்தாள்.

மணிமேகலை உலகவறவியில் பிக்குணிக் கோலத்துடன் பலர்க்கும் உணவளிக்குஞ் செய்தி உதய குமரனுக்கு எட்டியது. அவன் விரைந்து உலக வறவி புகுந்தான். வந்த உதயகுமரனை மணிமேகலை வணங்கிப் பின் கோயிலினுள் சென்று, வேற்றுருக் கொள்ளும் மந்திரத்தின் உதவியால் காய சண்டிகை உருவத்துடன் வெளி வந்தாள். உண்மையை உணராத உதய குமரன் மணிமேகலையைக் காணாது மயங்கி அரண்மனை சென்றான். மணிமேகலை காயசண்டிகை உருவத்துடன் இருந்து அமுத சுரபியைக் கையில் ஏந்தி உணவளித்து வந்தாள்.

மணிமேகலையை எங்ஙனமேனும் அடைய உதய குமரன் முயற்சி செய்யலானான். அது காலையில் காயசண்டிகையின் கணவனாகிய காஞ்சனன் என்னும் வித்தியாதரன் தன்மனைவியைக் காணக் காவிரிப்பூம்பட்டினம் வந்திருந்தான். தன் மனைவி நோய் நீங்கித் தன்னைக் காணத் தன்னூர்க்குச் சென்றதை அவன் அறியான். காயசண்டிகை வடிவுடன் இருந்த மணிமேகலையைத் தன் மனைவி என்றே எண்ணிய அவன் அவளிடம் அன்புடன் பேசத் தொடங்கினான். அவளோ காஞ்சனனைச் சிறிதும் மதித்தாளில்லை; முகங்கொடுத்தும் பேசினாளில்லை. அதுபோழ்து ஆண்டு உதய குமரன் மணிமேகலையைப் பற்றி அறியும்பொருட்டுக் காயசண்டிகை உருவுடன் இருந்த மணிமேகலையிடம் வந்திருந்தான். அவனைக் கண்ட மணிமேகலை அவனுக்கு இளமை நிலையாமையைப் பற்றிய பலவற்றை எடுத்துரைத்தாள். காஞ்ச

னன் பக்கம் அவள் திரும்பவே இல்லை. அது கண்ட காஞ்சனன் தன் மனைவி தன்னைப் புறக்கணித்து உதய குமரனை விரும்பினாள் என்று எண்ணி அன்றிரவு உதய குமரனைக் கொல்லத் துணிந்தான். அதற்கேற்ப அன்றிரவு உதயகுமரன் தனியாக அங்கு வரவே காஞ்சனன் அவனைத் தன் கை வாளால் வெட்டி வீழ்த்தினான். அதன் பிறகுதான் காஞ்சனன் ஆங்கிருந்த ஒரு தெய்வத்தால் தான் தவறு செய்ததை உணர்ந்து வருந்தினான். வருந்திப் பயன் என்ன? மாண்டவர் மீள்வாரோ? முடிவில் காஞ்சனன் வருந்திய வாறே தன் ஊர்போய்ச் சேர்ந்தான்.

உதய குமரன் இறந்ததை உணர்ந்த மணிமேகலை தன் உண்மை உருவத்தைக் கொண்டு அவனுக்காக வருந்தினாள். அப்பொழுது கந்திற்பாவை என்ற தெய்வம் அவளைத் தேற்றி அவளுக்குப் பிற் காலத்தில் நிகழ்வனவற்றை உரைத்தது. மணிமேகலையும் தேறியிருக்குங்கால் பொழுது புலர்ந்தது. உதய குமரன் இறந்ததை உணர்ந்த அரசன் மணிமேகலையைச் சிறை செய்தான் அரசனது மனைவியாகிய இராசமா தேவி தன் மகன் இறந்ததற்குக் காரணமானவள் மணிமேகலையே என்று அறிந்து, அவளுக்குப் பல விதங்களில் கொடுமை செய்யத் துணிந்து அவளைத் தன்னிடத்திலேயே இருத்திக்கொண்டாள். ஒரு நாள் அரசி அவளுக்குப் பித்தேற்றும் மருந்தை ஊட்டினாள். மணிமேகலையோ மறுபிறப்புணர்ந்தவள்; ஆதலின் அவளது அறிவு திரியவில்லை. பிறகு அரசி கல்வி அறிவில்லாக் கசடன் ஒருவனை

மணிமேகலையின் அறைக்குத் தனித்துச் சென்று அவளுடன் இருக்குமாறு கூறி விடுத்தாள். அவ்வாறே அவன் சென்ற காலையில் மணிமேகலை வேற்றுருக் கொள்ளும் மந்திரத்தின் வன்மையால் ஆணுருக் கொண்டிருக்கவே அக் கசடன் அகன்றான். இறுதியில் இராசமா தேவி அவளைக் கொல்ல எண்ணிப் புழுக்கறையில் அடைத்து உணவில்லாமல் செய்தாள். ஆயின் மணிமேகலை ஊணொழி மந்திரம் கற்றவளாதலின் அதன் உதவியால் வாட்டமின்றி இருந்தாள். இராசமாதேவி முடிவில் தன் பிழையை உணர்ந்து அஞ்சி மணிமேகலையை வணங்கித் தன் பிழையைப் பொறுக்குமாறு வேண்டினாள். மணிமேகலையும் அவளுக்குப் பல நல்லுரைகள் கூறி அவளால் உபசரிக்கப் பெற்றாள்.

மணிமேகலை பிறகு மணிபல்லவம் சென்று அதன்பின் வஞ்சிமாநகர் புகுந்தாள்; அந்நகரத்தின் புறத்தில் அமைந்த கோயிலில் தன் தாய் கண்ணகியையும், தந்தை கோவலனையும் வணங்கினாள். கண்ணகித் தெய்வமும் அசரீரியாக மணிமேகலைக்குப் பல நல்லுரைகள் கூறியது. மணிமேகலை பின்பு ஒரு முனிவன் உருவங் கொண்டு வஞ்சி நகரில் இருந்த பல சமயக் கணக்கர்களின் சமய உண்மைகளைக் கேட்டு உணர்ந்தாள். அந்நகரில் தவஞ் செய்து கொண்டிருந்த மாசாத்துவானை அவள் வணங்கிய பொழுது அவன் காஞ்சி நகரில் பெரும் பஞ்சம் நேர்ந்துள்ளதென்றும், அமுத சுரபியுடன் அங்குச் சென்று எல்லோரையும் காக்குமாறும் கூறினான். மணிமேகலையும்

அவ்வாறே காஞ்சி நகர் புகுந்து மக்களின் பசி நோய்க்கு மருத்துவம் செய்துவந்தாள்.

இதற்கிடையில் காவரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழா செய்யப்படாது ஒழிந்தது. எனவே மணிமேகலா தெய்வத்தின் சினத்தால் அந்நகரைக் கடல் கொண்டு விட்டது. ஆதலின் மணிமேகலை மீட்டும் புகார் செல்ல இயலவில்லை. அவள் காஞ்சியின் புறத்தே அமைந்த ஒரு சோலையில் தங்கித் தன் பவத்திறம் அறுமாறு நோற்றாள்.

இதுவே கூலவாணிகன் சாத்தனார் என்ற பெரும் புலவர் மணிமேகலை என்ற நூலில் கூறும் மணிமேகலையின் வரலாற்றுச் சுருக்கம் ஆகும். சிலப்பதிகார வரலாறும், இவ்வரலாறும் புகாரைப் பற்றிய பலவகைச் செய்திகளை அறியப் பேருதவி புரிவனவாம். இனிப் புகார் நகரத்தைப் பற்றி விளங்க அறிவாம்.

# 3. இரு பெரும் பிரிவுகள்

புகார் நகரத்தில் இரு பெரும் பிரிவுகள் இருந்தன. அவை மருவூர்ப் பாக்கம், பட்டினப் பாக்கம் என்பனவாகும். அவற்றுள் மருவூர்ப் பாக்கத்தைப் பற்றி முதலில் அறிவோம்.

மருவூர்ப் பாக்கத்தில் யவனர் இருக்கைகள் அமைந்திருந்தன. எகிப்து, கிரீசு முதலிய அயல் நாடுகளிலிருந்து வந்த வாணிகர், தொழிலாளர் முதலியோர் 'யவனர்கள்' என்று அழைக்கப்பட்டனர். யவனர்களை மிலேச்சர் என்றும், சோனகர் என்றும் பழைய உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். யவனர்கள் கடைச் சங்க காலத்தில் நம் தமிழ் நாட்டுடன் பெரு வாணிகம் செய்து வந்தனர் என்பதை நமது பழந் தமிழ் நூல்களால் நன்கு அறியலாம். அன்றியும் எகிப்து, கிரீசு முதலிய நாடுகளின் சரித்திர நூல்களிலும் அந் நாட்டார் தமிழ் நாட்டாருடன் செய்து வந்த வாணிகத்தைப் பற்றிக் குறிப்புகள் உள்ளன. யவனர் புகாரில் வாணிகத்தின் பொருட்டும், தொழில் செய்து பிழைக்கும் பொருட்டும் வந்து குழுமினர். அவர்கள் தாம் வதிவதற்குப் பல இருக்கைகளை அமைத்துக் கொண்டனர். அவற்றுள் நிலா முற்றங்களும், பெரிய அணிகலங்கள் பெய்த பண்டசாலைகளும் இருந்தன. அவர்களுடைய மாளிகைகளின் சாளரங்கள் மான் கண் போல அமைந்திருந்தன. இவை யாவும் புகார் முகப் பக்கங்களில் தம்மைக் காண்போர் கண்களைக் கவர்ந்தனவாம்.

அங்குப் பல பரதேசத்தார் கலந்து ஒரு தேசத்தாரைப் போல் வாழ்ந்து வந்தனர். அப் பரதேசத்தார் கடல் வாணிகத்தினுல் பொரு ளீட்ட வந்தவர்கள் ஆவர். எனவே அக்காலத்தில் புகார் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கிய தென்பது நன்கு போதரும்.

மருவூர்ப் பாக்கத்து வீதிகளில் பலவகைப் பண்டங்களை விற்றுத் திரிவோர் மிக்கிருந்தனர். அவர்கள் நறுமணத்துடன் கூடிய பூசு சுண்ணம், சந்தனம், விடுபூ, தொடுத்தபூ, அகில் முதலிய வற்றை விற்றுத் திரிந்தனர். இச்செய்தியிலிருந்து அந் நகரத்து வீதிகளில் நிகழ்ந்து வந்த சிறு வாணி கத்தைப் பற்றி நன்கு அறியலாம்.

மருவூர்ப் பாக்கத்தில் பலவகையான தொழி லாளர்கள் வதிந்து வந்தனர். பட்டு நூலாலும், உரோமத்தாலும், பருத்தி நூலாலும் நுட்பமான அரிய தொழில்களைப் பட்டுச் சாலியர் செய்து வந்தனர். வெண்கல வேலை செய்யும் கன்னர், செப்புப் பாத்திரம் செய்யும் கன்னர், மர வேலை செய்யும் தச்சர், வலிய ஸ்கயினையுடைய கொல் லர், சித்திரம் வரைவோர், சிற்பியர், பொற்பணி செய்யும் உருக்குத் தாட்டார், இரத்தின அணிகள் செய்யும் தட்டார், தையற்காரர், தோலில் வேலை செய்யும்செம்மார், துணியினுலும், கெட்டியினுலும் பொய்க் கொண்டை முதலியன செய்வோர் ஆகிய பலவகையான சிறந்த தொழில் வல்லுநர் அவ்விடத்தில் வாழ்ந்து வந்தனர்.

அங்கிருந்த வீதிகளில் பொருள்கள் பல தலை மயங்கிக் கிடந்தன. பட்டும், பவளமும், சந்தன

மும், அகிலும், முத்தும், ஏனைய மணிகளும் பொன்னும் ஒன்றுடன் ஒன்று கலந்திருந்தன. அவை இவ்வளவின என்று அளந்து முடிவு காணுதல் இயலாது என்கின்றார் இளங்கோவடிகள். இதனால் அந் நகரின் செல்வச் சிறப்புத் தெற்றென விளங்குகிறது.

மருவூர்ப் பாக்கத்தில் " கூலங் குவித்த கூல வீதி " இருந்தது. கூலம் என்பது தானியம் ஆகும். தானியங்கள் பதினெட்டு வகைப்படும். அவை நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள், கொள், பயறு, உழுந்து, அவரை, துவரை, கடலை, மொச்சை, மூங்கில் நெல், காராமணி ஆகியவை ஆகும். இத் தானியங்கள் தனித் தனியாக அவ்வீதியில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. கூலங்கள் குவித்து வாணிகம் நிகழ்த்தப் பெற்ற வீதி கூல வீதி எனப்பட்டது. அந் நகரத்திற்கு விளைபொருள்கள் யாவும் வந்தன என்பதை இக் குறிப்பினால் நன்கு அறியலாம்.

ஒரு நகரம் என்றால் பல்வகை உணவு கொள்வோரும் கலந்திருப்பது இயல்பேயாகும். அதற்கேற்ப அவ்விடத்தில் பிட்டுவாணிகரும், அப்பம் சுடுவோரும், கள் விற்கும் பெண்டிரும், மீன் விற்கும் பரதவரும், உப்பு விற்கும் உமணரும், வெற்றிலை விற்போரும், பலவகையான ஆடுகளின் தசைகளை விற்போரும், எண்ணெய் வாணிகரும் நெருங்கி வசித்து வந்தனர். அவ்விடத்தை " ஊன் மலி இருக்கை " என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

மேற் கூறியவர்களை யன்றி இசை நுட்பத் தினையறிந்து பாட வல்ல பெரும் பாணர்களும், சிறு கைத்தொழில்கள் பலவற்றைச் செய்வோரும், பிறர்க்குக் குற்றேவல்புரியும் மக்களும் மருவூர்ப் பாக்கத்தே வசித்து வந்தனர். எனவே மருவூர்ப் பாக்கத்தில் யவனர்கள் இருக்கை, பரதேசத்தார் இருக்கை, பல பொருள்களை விற்போர் இருக்கை, பலவகைத் தொழிலாளர் இருக்கை, பெரும்பாணர் இருக்கை ஆகியவை இருந்தன என்றும், நகர வீதியும், அகன்ற வளம் செறிந்த வீதியும், கூல வீதியும் இருந்தன என்றும் நன்கு வெளிப்படுகின்றதன்றோ!

இனி, பட்டினப் பாக்கம் என்று அழைக்கப்பட்டு வந்த பகுதியைப் பற்றி நோக்குவோம். இஃது அக நகர் எனப்பட்டது. மருவூர்ப்பாக்கத்தில் பாமர மக்கள் பலரும், தொழில் செய்வோரும், வாணிகம் செய்வோரும் வதிந்து வந்தனர் என்று முன்னர்ப் பார்த்தோம். ஆயின் பட்டினப் பாக்கத்தில் செல்வர்களும், உயர்ந்தோர்களும் வாழ்ந்து வந்தனர் என்று கொள்ளலாம்.

பட்டினப் பாக்கத்தில் பெரிய இராச வீதிகள் இருந்தன. கொடிகள் கட்டப்பட்ட தேரோடும் அகன்ற வீதிகள் இருந்தன. கடைத் தெருக்கள் இருந்தன. பெரிய குடிப் பிறப்பினையுடைய வணிகர்களின் மாடங்களையுடைய தெருக்களும் இருந்தன. அங்கு வேதியர் ஒரு புறம் வாழ்ந்தனர். யாவரும் விரும்பும் உழவர் ஓர் புறம் வதிந்தனர். மருத்துவ நூலோர் ஓர் புறம் குடி இருந்தனர். ஓர் புறம் சோதிடர் தங்கியிருந்தனர்.

பட்டினப் பாக்கத்தின் ஒரு புறத்தே முத்துக் கோப்போரும்,வளையை அறுத்து இயற்றுவோரும் வசித்துவந்தனர். இவ்வாறு தனித்தனியே பற் பல வீதிகள் அங்கு இருந்தன. அவற்றுள் சூதர், மாகதர், நாழிகைக் கணக்கர், கூத்தர், குயிலுவர், வாத்தியக்காரர், விதூடகர், தேர்ப்பாகர், யானைப் பாகர், குதிரையினைச் செலுத்துவோர், காலாட் படைத்தலைவர் ஆகியோர் வாழ்ந்தனர். நின்று ஏத்துவோர் சூதர் ஆவர். இருந்து ஏத்துவோர் மாகதர் ஆவர். நாழிகைக் கணக்கர் என்போர் அரசனுக்குச் சென்ற நாழிகையை அறிந்து கூறு வோர் ஆவர். குயிலுவர் என்போர் தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, உருக்குக் கருவி ஆகியவற்றில் வல்லோர்களாவர். எனவே அர சரைச் சேர்ந்து ஒழுகுவோர் பலரும் பட்டினப் பாக்கத்தில் வாழ்ந்து வந்தனர் என்று கொள்ள லாம்.

மருவூர்ப்பாக்கத்திற்கும், பட்டினப்பாக்கத் திற்கும் நடுவில் ‘இடை நிலம்’ இருந்தது. இரண்டுபெரிய அரசர்கள் போர் குறித்து வந்து தங்கிய பாசறையிருப்புக்கு இடைப்பட்ட நில மாகிய போர்க்களம் போல் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்ற இரு பகுதிகட்கும் நடு வில் இடைநிலம் அமைந்திருந்தது. போர்க்களம் இருபக்கத்து அரசர்களுக்கும் பொது நிலமாகும். அவ்வாறே இவ்விடை நிலமும் இருபாக்கத் தினர்க்கும் பொதுவாக விளங்கியது.போர்க்களத் தில் பேரொலி இருப்பதுபோல இவ்விடை நிலத் திலும் பேரொலி இருந்தது. இவ்வாறு பேரொலி

யுடன் மக்கள் அங்குக் குழுமியதற்குக் காரணம் அங்கு நாளங்காடி கூடியதேயாகும். நாளங்காடி என்பது காலைக் கடைத்தெரு ஆகும். அங்குப் பொருள்களைக் கொடுப்போர் ஓதையும், கொள்வோர் ஓதையும் மிக்கு இருந்தன. அவ்விடத்திலிருந்த மரங்களின் அடிப்பகுதிகளையே தூண்களாகக் கொண்டு கடைகள் கட்டப்பட்டிருந்தனவாம். இவ்வாறு அமைக்கப்பட்ட கடைகளுடன் அக்காலைக் கடைத் தெரு விளங்கியது. காலைக் கடைத் தெருவை 'நாளங்காடி' என்றும் மாலைக் கடைத்தெருவை 'அல்லங்காடி' என்றும் முன்னோர் குறிப்பிட்டுள்ளனர்.

இந் நாளங்காடியில் பலி கொள்ளும் பூதம் ஒன்று தங்கியிருந்தது. அதனை நாளங்காடிப் பூதம் என்று அழைத்தனர். இப் பூதம் புகாருக்கும் அரசனுக்கும் காவலாக இருந்து வந்தது. இது பற்றிய வரலாறு ஒன்று உள்ளது. அது வருமாறு:—

புகார் நகரை முசுகுந்தன் என்ற ஒரு அரசன் ஆண்டுவந்தான். அக்காலத்தில் தேவருலகில் காவலுடன் வைக்கப்பட்டிருந்த அமிழ்தத்தைக் கலுழன் கவர்ந்து சென்றான். இமையவர்க்கரசன் அதனை மீட்கக் கருதியபோழ்து, தான் இல்லாத காலத்தில் தன் பொன்னகரைக் காப்பார் யார் என்று கவலை கொண்டான். அது பொழுது முசுகுந்தன் 'யானே காவல் புரிவேன்' என்று கூறினன். அது கேட்ட வானவர்க்கிறைவன் வரம்பிலா மகிழ்ச்சிகொண்டு, முசுகுந்தனுக்குத் துணையாக இருக்குமாறு ஆங்கொரு பூதத்தை நிறுத்திச் சென்றனன். இந்திரன் இல்லாத இச்

சமயமே பொன்னுலகை வென்று கொள்வதற்கு ஏற்ற சமயம் என்று எண்ணிய அவுணர்கள் குழுமி வந்து முசுகுந்தனுடன் போர்செய்தனர். அப்போரில் அவுணர்கள் தோற்றோடினர். அங்ஙனம் ஓடிய அவுணர்கள் ஒன்று கூடி முசுகுந்தனை வஞ்சத்தால் வெல்லச் சூழ்ந்து இருட்கணை ஒன்றை ஏவினர். அதனால் எவ்விடமும் இருள் சூழ்ந்தது. முசுகுந்தனின் கண்ணும் மனமும் மறைந்தன. அவன் செய்வகை அறியாது போரொழிந்து திகைத்து நின்றான். அவ்வமயம் இந்திரனால் துணையாக நிறுவப்பட்ட பூதம் அங்கு நிறைந்த இருள் உடைதற்குக் காரணமான ஒரு மந்திரத்தை அவனுக்கு உரைத்தது. முசுகுந்தன் அம்மந்திரத்தின் உதவியால் மாய இருளை அகற்றி அவுணர்களைக் கொன்று நின்றான். அக்காலையில் ஆண்டு மீண்டு வந்த இந்திரன் 'பகைவரை எவ்வாறு கொன்றாய்?' என்று வினவ, முசுகுந்தன், பூதத்தின் உதவியால் தான் பகைவரைச் செற்றமையை உரைத்தான். அதுகேட்ட இந்திரன் மகிழ்ந்து அப்பூதத்தை முசுகுந்தனுக்கு மெய்க்காவலாக என்றும் இருக்குமாறு பணித்தான். அப்பூதமே முசுகுந்தனுடன் புகார் புகுந்தது. இவ்வரலாறு சிலப்பதிகார உரையால் விளங்க உணரக் கிடக்கின்றது. இந்நாளங்காடிப் பூதம் நகரைக் காவல் புரிந்து வந்தது. காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழா கொண்டாடப்படுதல் நிற்பின் இப்பூதம் சினந்து துன்பம் செய்யும் என்று மணிமேகலை நூல் கூறுகின்றது.

இப்பூதத்தைப் பேணிவந்த முறை நூல்களுள் நன்கு கூறப்பட்டுள்ளது. அவரை, துவரை முதலிய பண்டங்களை வேகவைத்த புழுக்கலையும், எள்ளுருண்டையையும், நிணத்துடன் கூடிய சோற்றையும், பொங்கற் சோற்றினையும் மறக்குடிப் பெண்டிர் பூதத்திற்குப் படைப்பர்; பூவினைச் சிதறுவர்; நறும்புகை எடுப்பர்; துணங்கைக் கூத்தையும், குரவைக் கூத்தையும் ஆடுவர். ஒருவருக்கு அதுபொழுது தெய்வம் ஏறும். அவ்வாறு தெய்வமேறப் பெற்றவரும் ஆடுவார். பிறகு அவர்கள் மன்னனது பெரிய நிலம் முழுவதிலும் பசியும், பிணியும், பகையும் நீங்கி, மழையும் வளமும் சுரக்க என வாழ்த்துவர்.

யாம் இதுகாறும் கூறியவாற்றால் காவிரிப் பூம் பட்டினத்தின் இருபெரும் பிரிவுகளாகிய மருவூர்ப்பாக்கம்,பட்டினப்பாக்கம் என்பவற்றின் அமைப்புகளையும், அவ்விரண்டின் இடைப்பட்டுக் கிடந்த இடை நிலத்தையும் பற்றி விளங்க உணரலாம். இனிப் புகாரின் ஏனைய சிறப்புக்களை அறிவாம்.

# 4. ஐவகை மன்றம்

புகாரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழர்களின் முன்னோன் ஒருவன் இந்திரனுக்குச் செய்த உதவிக்குக் கைம்மாறாக இந்திரன் ஐவகை மன்றங்களை அளித்தான். அந்த ஐவகை மன்றங்களும் புகாரில் இருந்தன என்று கூறப்படுகின்றது. அவை வெள்ளிடைமன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் நின்ற மன்றம், பூத சதுக்கம், பாவை மன்றம் ஆகிய ஐந்தும் ஆகும்.

வெள்ளிடை மன்றம் என்பது வெளியான இடத்தை உடைய மன்றம் ஆகும். இங்குப் பலருடைய பெயர்கள் பொறிக்கப் பெற்று, அடையாள எழுத்தினை இலச்சினையாக அமைக்கப்பட்ட பல பொதிகள் வைக்கப்பட்டிருக்கும். அவற்றில் அளவு, நிறை, எண் ஆகிய இலக்கங்களும் பொறிக்கப் பெற்றிருக்கும். அப் பண்டசாலையின் வாயிலுக்குக் காவல் வைக்கப்படுவதில்லை. கதவிற்குத் தாழும் இல்லை. பண்டங்களின் உரிமையாளரும் அவற்றைக் காத்திரார். அந் நகரில் யாவரும் செல்வராதலானும், பிறர் பொருள் வெஃகும் பேதைமை அவர்களிடம் இன்மையாலும் அப் பொருள்களை அந் நகரத்தார் திருட நினையார். அவ்வூருக்குப் புதிதாக வந்தவர்களும் திருட நினையார். ஒரு வேளை எவரேனும் ஒருவர் அப் பண்டப் பொதிகளில் ஒன்றைத் திருடித் தலையில் வைத்தார் எனின், அவர் திரும்ப அப்பொதியைக் கீழே இறக்குதல் முடியாது. அவரது கழுத்துக்

கடுக்குமாறு அப்பொதி, இறுத்தி, அவர் அவ்வூரைச் சுற்றிச் சுற்றி வருமாறு செய்யும். அவர் அதனை வேறு எவ்விடமும் எடுத்துச் செல்ல இயலாது. இத்தன்மையை அவ்வூருக்கு வந்த யாவரும் நன்கு அறிவர். எனவே திருட வேண்டும் என்று மனத்தில் நினைப்போரும் இச் செய்தியைக் கேட்ட அளவில் நடுங்குவர். ஆகவே திருட நினைத்தாலும் நடுக்கத்தை உண்டாக்கும் தன்மை அவ் வெள்ளிடை மன்றத்திற்கு இருந்தது என்று கூறப்படுகின்றது. இச் செய்தியால் புகாரில் களவு நிகழ்தல் அரிது என்பதையும், அந்நகர மக்கள் செல்வத்தில் திளைத்தனர் என்பதையும், அவர்கள் கள்ள உள்ளம் படைத்தவர்கள் அல்லர் என்பதையும் நன்கு அறியலாம். பண்டப் பொதிகளுக்கு இலக்கங்கள் இடப்பெற்ற செய்தியும் இறும்பூது பயக்கின்றது.

இனி இலஞ்சி மன்றத்தின் இயல்பை நோக்குவோம். இலஞ்சி என்பது பொய்கையாகும். இலஞ்சி மன்றத்தில் ஒரு பொய்கை இருந்தது. அதன் நீர் தூய தன்மையும், நோய் நீக்கும் தன்மையும் பெற்றிருந்தது. இந் நீரில் கூனர் மூழ்கின் கூன் நீங்கி நிமிர்வர். குறளர் முழுகின் நெடியர் ஆவர். ஊமர் முழுகின் பேசுந் தன்மை பெறுவர். செவிடர் முழுகின் கேட்குந் தன்மை பெறுவர். தொழு நோய் என்று அழைக்கப்படும் குட்ட நோயினால் அழுகியஉடம்பினை உடையோர் முழுகின் அவரது நோய் அகன்று குற்றமற்ற அழகினையுடைய நல்லுருவைப் பெறுவர். இவ்வாறு முழுகி நோய் நீங்கப் பெற்றவர்கள் பின்பு அப்பொய்

கையை வலஞ்செய்து தொழுது நீங்குவர். இவ் விலஞ்சி புகாரில் இருந்த காரணத்தால் புகார் மக்கள் நோயும், நோவும் இன்றி இன்பமாக வாழ்ந்தனர் என்பதை அறியலாம்.

இவ்வாறு இலஞ்சி மன்றத்தின் இயல்பினை இயம்பிய இளங்கோவடிகள் இதற்குப் பிறகு நெடுங்கல் நின்ற மன்றத்தின் தன்மையைக் கூறுகின்றார். நெடுங்கல் நின்ற மன்றம் என்ற அளவிலே அம் மன்றத்தில் ஒரு நீண்ட கல் நின்றது என்பதை அறியலாம். அக்கல் தெய்வத் தன்மை வாய்ந்து பேரொளியுடன் விளங்கியது. அக் கல்லை ஒரு முறை சுற்றி வந்து தொழுதோர் துயர்கள் நீங்கும்; வஞ்சனையால் மருந்தூட்டப் பெற்றுப் பித்தேறினோர் அறிவு தெளிவுறுவர்; நஞ்சம் உண்டு நடுக்கும் துயரைப் பெற்றோருக்கு நஞ்சு நீங்கி உயிர் தளிர்க்கும்; அழலும் விடத்தை யுடைய பாம்பினால் கடியுண்டோர் விடம் நீங்கி எழுவர்; பிதுங்கிய கண்களைக் கொண்ட பேயி னால் கடுந் துன்பம் அடைந்தோர் துன்பம் நீங்கி இன்பம் அடைவர். எனவே மருந்தினால் பித் தேற்றப் பட்டோரும், நஞ்சம் உண்டோரும், பாம்பு தீண்டப் பெற்றோரும், பேய் பிடிக்கப் பட்டோரும் அக் கல்லின் அருளினால் துயர் நீங்கி மகிழ்ச்சி உறுவர். இச் செய்தியினின்றும் மக்களுக்கு இயற்கையாக உண்டாகும் தீங்குகள் நீங்கின என்று தெரிகின்றது.

இதன் பின்னர்ச் சிலப்பதிகாரத்தில் புகாரி லிருந்த பூத சதுக்கத்தின் இயல்பு கூறப்படுகின்

றது. சதுக்கம் என்பது நாற்சந்தியைக் குறிக்கும். நான்கு தெருக்கள் ஒன்று கூடும் இடத்தை நாம் நாற்சந்தி என்கின்றோம். அந்நகரிலிருந்த ஒரு சதுக்கத்தில் அமைந்த மண்டபத்தினிடத்தே பூதம் ஒன்று இருந்து வந்தது. அக்காரணம் பற்றி அம் மன்றத்தைப் பூதசதுக்கம் என்றும், அப் பூதத்தைச் சதுக்கப் பூதம் என்றும் அழைத்து வந்தனர். அப் பூதம் தன் கையில் பாசம் ஒன்றைப் பற்றி இருந்தது. அந் நகரத்தில் நீதிக்குப் புறம்பாக நடந்தவர்களை அப்பூதம் தன் கைப் பாசத்தாற் பிணித்து வந்து அறைந்து உண்ணும். தவ வேடத்தில் மறைந்து நின்று செய்யக்கூடாத தீய செயல்களைச் செய்து ஒழுகி வந்த போலித் துறவிகள் அப்பூதத்தினால் அறைந்து உண்ணப் பெறுவர். மறைவாகத் தீய நெறியில் ஒழுகும் பெண்டிரையும், அரசனைக் கூடியிருந்தே அரசனுக்கு எதிராகச் சதிசெய்து, அற்றம் பார்த்துக் கொல்ல நினைந்து வாழ்ந்து வந்த அமைச்சரையும், பிறர் மனைவியரை விரும்பும் பேதையரையும், நீதி மன்றத்தில் பொய்ச் சான்று புகல்வோரையும் அப்பூதம் புடைத்து உண்ணும். கண்ட இடத்துப் புகழ்ந்து பேசி, காணாத இடத்து இகழ்ந்து பழிதூற்றும் புறங் கூற்றாளர் இப் பூதத்தின் பாசத்தில் சிக்கி, அடியுண்டு, அதற்கு உணவாவர். அப் பூதம் அச் சதுக்கத்தில் நின்றவாறே அந்நகரில் மேற்காட்டியன போன்ற தவறு செய்தோர் தன் கைப்பாசத்தால் கட்டுண்டு மாள்வார் என்ற

செய்தியைக் கடுங்குரலுடன் கூறும். அக் குரலொலி நாற்காத வட்டம் கேட்கும் என்று சொல்லப்படுகின்றது.

இச் சதுக்கப் பூதம் தான் கூறியவாறே செய்து வந்ததற்கு ஆசிரியர் இளங்கோவடிகள் ஒரு உதாரணமும் காட்டுகின்றார். கோவலன் சிலம்பினை விற்று வாணிகம் செய்து பொருளீட்டற் பொருட்டுக் கண்ணகியுடன் மதுரைசெல்வானாயினன். மதுரையைக் குறுகிய அவன், கவுந்தியடிகளுடன் சிறிதுகாலம் மதுரையின் எயிற்புறத்தே தங்கி யிருந்தான். அது பொழுது ஆங்கு மாடலன் என்ற மறையோன் வந்து சேர்ந்தனன். வந்த அந்தணனைக் கோவலன் வணங்கினன். மாடலன் கோவலனது செய்தியை உணர்ந்து வருந்தியவனாய், அவனது பேரருளின் திறத்தினை வெளிப்படுத்தும் வரலாறுகளை எடுத்து உரைக்கலாயினன். அவ்வாறு கூறி வருங்கால் பின் வருகின்ற வரலாற்றினைக் குறிப்பிடுகின்றான் :—

காவரிப்பூம் பட்டினத்தில் கணவனையே கடவுளாகக் கருதி வழிபட்டு வந்த கற்புடைய பெண்ணொருத்தி இருந்தாள். அவளது கற்பினில் அழுக்காறு கொண்ட ஒரு கயவன், அவளது கணவனிடம் சென்று, அவள் பொய்ப் பழியினை அடையும் வண்ணம் பொய்ச் சான்று பகர்ந்தான். அவ்வளவில் சதுக்கப் பூதம் அக்கயவனைத் தன் பாசத்தால் கட்டியிழுத்துச் சென்றது. அஃதறிந்தஅவன் தாய் பெருந்துயரம் எய்திப் புலம்பினாள். அவளது

புலம்பலைக் கேட்டான் கோவலன்; விரைந்து பூத சதுக்கம் எய்தினன்; பூதத்தின் பாசத்தினுள் விரைந்து புகுந்தான்; அப்பூதத்தை நோக்கிக் கோவலன், 'என் உயிர் கொண்டு ஈங்கு அவன் உயிர் தா' என்று கேட்டான். ஆயின், அப்பூதம் அவனுயிரைக் கொடுக்க மறுத்தது; கீழோனுடைய உயிரின் பொருட்டு நல்லஉயிர் ஒன்றினைக் கவர்ந்து, மேலான நிலையை இழக்கும் தன்மை என்னிடம் இல்லை என்று கூறியது. அவ்வளவோ? கோவலன் எதிரிலேயே அக்கயவனை அடித்து உண்டது. அது கண்ட கோவலன் வருத்தமுற்றுத் திரும்பி வந்து இறந்தோனது தாய்க்கும் உறவினர்க்கும் பல காலம் உணவளித்துக் காப்பாற்றி வந்தான்.

மேற் காட்டிய வரலாற்றிலிருந்து அப் பூதத்தின் இயல்பு நன்கு வெளிப்படுகின்றது. அது தீயன செய்தோரைப் பற்றும் என்பதும், நல்லோரைக் கவர்வது இல்லை என்பதும், ஒருவர் தீது செய்யின் எக் காரணம் பற்றியும் அதைப் பொறுப்பதில்லை என்பதும் தெற்றெனவிளங்குகின்றன. தவம் மறைந்து ஒழுகுவோர்போன்றோரையே ஒறுத்து, நல்லோர்க்குத் தீங்கு செய்யாமல் இருந்த காரணத்தினலேயே ஆசிரியர் அதனை நன்னெடும் பூதம் என்று குறிப்பிடுகிருர். இப் பூதத்தின் செய்தியிலிருந்து புகாரில் தீமை யாதும் நடப்பதில்லை என்பதும், நடப்பின் உடனே தண்டனை அளிக்கப்பட்டு வந்தது என்பதும் நன்கு விளங்கக் கிடக்கின்றன.

ஐவகை மன்றங்களில் இறுதியாகச் சிறப்பிக்கப்படுவது பாவை மன்றமாகும். அங்கு ஒரு பாவை நின்றதால் அது பாவை மன்றம் என்று அழைக்கப்பட்டது. அப் பாவை தெய்வத்தன்மை வாய்ந்தது. அந்நகரத்தில் செங்கோல் கோடி கொடுங்கோல் நிகழின் அதைத் தடுப்பதற்கு உதவியாக இருந்தது அப்பாவையே யாகும். அரசனது செங்கோல் சிறிது வளைந்ததாயினும், தருமாசனத்தோர் வழக்குரைக்குங்கால் நடுவு நிலைமை நீங்கி ஒருபக்கம் பற்றித் தீர்ப்புக் கூறினாலும் அப் பாவையின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழியும். அப்பாவை நாவினால் சொல்வதில்லை. ஆயின் தவறு நிகழ்ந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாக அது துன்பக் கண்ணீரைச் சொரியும். கண்ணீர் சொரிவதைக் கண்ட அரசனும் தருமாசனத்தோரும் தாம் அறியாமற் செய்த பிழைகளை உணர்ந்து அவற்றைத் திருத்துவர்.

ஒரு நாட்டில் அரசனுக்குத் தெரியாமலேயே பல தீச்செயல்கள் நிகழ்வது உண்டு. ஒரு நாட்டு மக்களுக்கு ஐந்து விதங்களில் தீங்குகள் நிகழலாம். அவை அரசராலும், அரசனது உறவினர்களாலும், பகைவர்களாலும், கள்வராலும், காட்டு விலங்குகளாலும் வரும் தீங்குகளாகும். மக்கள் தமக்கு மேற்கண்ட விதங்களில் நிகழும் தீங்குகளை அரசரிடம் உடனுக்குடனே அறிவித்து விடுவர். அரசனது உறவினர்களால் தீங்கு நேர்வதாக அறி

யின் அரசன் அவர்களை அகற்றி விடுவான்; பகைவர்களால் தீங்கு நிகழ்வதை உணரின் அவர்கள் மேற் படை எடுத்துச் சென்று அவர்களை ஒழிப்பான். கள்வர்களைக் கண்டுபிடித்துக் கடும் தண்டனைக்கு உட்படுத்துவான். காட்டு மிருகங்களை வேட்டையாடி அழிப்பான். ஆனால் அரசனாலேயே நிகழும் தீங்குகள் எவ்வாறு அகலும்? குடிகள் அவற்றை அரசனிடம் எடுத்துக் கூறவும் அஞ்சுவர். அரசன் தான் அறியாமலேயே அத் தீங்குகளுக்குக் காரணமாக இருப்பான். இத்தகைய காலங்களில் மேற்கூறிய பாவை கண்ணீர் விட்டு அழும். அவ்வளவில் அரசன் தன் செயல்களை ஆராய்ந்து பார்த்துத் தவறுகள் நிகழ்ந்திருப்பின் அவற்றைப் போக்குவான்; தன்னையும் திருத்திக் கொள்வான். எனவே, புகாரின் அப்பாவை அரசனுக்குத் தெரியாமல் நிகழும் தீங்குகளை அகற்ற உதவி புரிந்து வந்தது.

அறங் கூறு அவையம் என்பதற்கு "தருமாசனத்தார் வழக்கு உரைக்குமிடம்" என்று அடியார்க்கு நல்லார் பொருளெழுதி யுள்ளார். இக்காலத்தில் கிராமங்களில் உள்ள பஞ்சாயத்துச் சபைபோன்றதாக அதனைக்கொள்ளலாம். அங்கு அந் நகரத்து மக்கள் தம் வழக்குகளைத் தொடுப்பர். அவ்வழக்குகளைத் தருமாசனத்தார் ஆய்ந்து ஒரு பக்கம் கோடாது தீர்ப்பு அளித்து வந்தனர். சில சமயங்கள் சில சிக்கலான வழக்குகளும் அவர்கள் முன் வருவது உண்டு. அத்தகைய காலங்களில்

அவர்கள் உண்மையை உணராது தவறாக நீதிகூறு தலும் நிகழும். இவ்வாறு கூறப்பட்ட சமயங்களி லும் அப்பாவைகண்ணீர் விட்டுக் கதறும். அஃ துணர்ந்த நீதி மன்றத்தார் தம் தீர்ப்புத் தவறுனது என்பதை யறிந்து அத்தீர்ப்பினை மாற்றி விடுவர். எனவே, பாவை மன்றத்தின் பாவையால் புகாரில், அறியாமல் நிகழ்ந்த தீமைகளும் அகற்றப்பட்டன என்பதை அறியலாம்.

மேற் காட்டிய ஐவகை மன்றங்கள் புகாரில் இருந்தமையால் அங்குக் கொலை, களவு, காமம், பொய் முதலியன நிகழ்வதில்லை என்பதையும் மக்களுக்கு இயற்கையிலும், செயற்கையிலும் வரும் நோய்கள் விரைவில் அகற்றப்பட்டன என் பதையும், கொடுங்கோல் நிகழ்வதில்லை என்பதை யும் நாம் நன்கு அறியலாம்.

# 5. ஐவகை வனம்

தற்காலத்தில் பெரிய நகரங்களின் இடையில் பல தோட்டங்கள் அமைக்கப்பட்டிருப்பதை யாவரும் அறிவர். பகல் முழுவதும் உழைத்துப் பாடுபட்ட மக்கள் மாலைக் காலத்தில் மன ஓய்வு பெறுவதற்கு ஏற்ற இடம் தோட்டமேயாகும். உடல் வருந்த உழைத்த ஒருவன் மாலையில் மலர் வனத்தே தங்குவானாயின் அவனது நினைவு இயற்கைக் காட்சிகளில் ஈடுபடும். தோட்டங்களின் பல வகைப் பூக்களின் மணமும், நிறமும், அழகும் அவனைக் கவரும். இலைகளின் பசுமை நிறம் அவனது இளைப்பை அகற்றும். குயில்களின் இனிய குரல் அவனுக்கு இன்பத்தை ஊட்டும். மரங்களின் பூக்களில் படிந்து மெல்லென வீசும் தென்றற் காற்று அவனது ஒடுங்கிய உயிரைத் தளிர்க்கச் செய்யும். நாள் முழுவதும் அறையினுள் அடைபட்டுக்கிடந்தோர் இயற்கைக் காட்சியில் திளைத்த வளவில், தம் உடல் துன்பத்தை மறந்து இன்பம் பெறுவர். நல்ல காற்று வீசப் பெறாத இடத்தில் பகலில் கிடந்து வேலை செய்தவர்கள் தம் உடம்பில் மெல்லிய காற்றுப் பட்டவளவில் உண்மையிலேயே உயரியதோர் உவகையை எய்துவர். இக்காரணங்கள் பற்றியே நகரங்களில் நகராண்மைக் கழகத்தாரும், கொடையாளரும் பல மலர்

வனங்களை ஏற்படுத்தியுள்ளனர். மலர் வனங்கள் மாண்புறத் திகழும் நகரத்தை நாகரிகத்திற் சிறந்த நகரமென இக்காலத்தார் கருதுகின்றனர்.

புகாரில் ஐவகை வனங்கள் இருந்தன என்று மணிமேகலை நூல் கூறுகின்றது. அவை இலவந்திகை வனம், உய்யான வனம், சம்பாதி வனம், கவேரவனம், உவ வனம் என்பன ஆகும். இலவந்திகை வனத்தைப் பற்றிச்சாத்தனாரும், இளங்கோவடிகளும் கூறுகின்றனர். இலவந்திகை என்பதற்கு இயந்திரவாவி என்றும், நீராவி என்றும் உரையாசிரியர்கள் பொருள் எழுதியுள்ளனர். அவ் வனத்தில் ஒரு இயந்திரவாவி இருந்த காரணத்தால் அஃது அப்பெயர் பெற்றது. அவ்வாவியில் வேண்டும் பொழுது நீரை நிரப்பலாம். அதன் நீர் தூய தன்மையை இழந்தால் அதனை அகற்றி விடலாம். அவ்வாறு நீரை நிரப்பவும், போக்கவும் உதவுகின்ற ஒரு இயந்திரம் அக்குளத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அக்காரணம் பற்றியே அஃது இலவந்திகை அல்லது இயந்திரவாவி என்று அழைக்கப்பட்டது.

அதனைச் சுற்றி அமைந்த வனம் இலவந்திகை வனம் என்று வழங்கப்பட்டது. இலவந்திகைச் சோலையை "அரசனும் உரிமையும் ஆடும் காவற்சோலை" என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார். அங்கு அரசனும் அரசனைச் சார்ந்து ஒழுகுவோருமே செல்லலாம்; ஏனையோர் செல்லுதல் கூடாது என்று கட்டுப்பாடு

செய்யப்பட்டிருந்தது. அரசனைச் சேர்ந்தோர் அங்கு எப்பொழுதும் இருந்து வந்தனர். அதற்குக் காவலும் இருந்து வந்தது.

இத்தகைய இலவந்திகையின் இயல்பு,

" பண்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர், இலவந்திகை"

என்று சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்குப் பல மரங்கள் வரிசையாகவும் ஒன்றன்மேல் ஒன்று அடுக்கப்பட்டது போலவும் அமைந்திருந்தன. எனவே அங்கு மரங்கள் பந்தர்போல் இருந்தன ; குளிர்ந்த நிழல் எங்கும் பரவியிருந்தது; சூரியனது வெம்மை சிறிதும் தோன்றுவதில்லை. அச்சோலையில் அரசன் ஆடல்பாடல்களில் ஆழ்ந்து அக மகிழ்வான்.

இனி உய்யான வனத்தைப் பற்றி உணர்வோம். காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திர விழா கொண்டாடுங்காலத்தில் தேவர்கள் யாவரும் வந்து உய்யான வனத்தில் உறைவர். ஆதலின் அங்கு மண்ணவர் செல்ல விரும்பார். அவ்வனம் இமையவர் வந்து தங்கும் இடமாகையால் அங்குப் பூத்த பூக்களில் வண்டுகள் பாடி மொய்ப்பதில்லை. மரங்கள் யாவையும் மலர்மாலைகளைச் சுமந்து நின்றன. மலர்கள் எப்பொழுதும் வாடுவதில்லை. மண்ணவர் அங்கு வாராதிருக்கும் பொருட்டு அவ்வனத்தில் கையில் பாசத்துடன் ஒரு பூதம் காத்து வந்தது. தேவர்கள் விரும்பும் பூக்களில் வண்டுகள் இமிர்தல் இல்லைஎன ஆன்றோர் கூறுவர். அங்கு வாடாத

மலர் மாலைகளைத் தேவர்களே நிருமித்தனரென்றும், மரங்கள் வாடா மலர் மாலைகளைச் சுமந்து நிற்பதிலிருந்தே பூதங் காத்தலை உணரலாம் என்றும் உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

உய்யான வனத்தை அடுத்திருந்தது சம்பாதி வனமாகும். 'சம்பாதி என்பவன் சடாயுவின் உடன் பிறந்தவன் ஆவான். அவன் எருவைகட்கு அரசன். சம்பாதி ஒரு கால் தனது உடன் பிறந்தவனுகிய சடாயுவுடன் வானில் பறந்து சென்முன். அது பொழுது சூரியனுடைய வெம்மையைப் பொறுக்கலாற்ருத சடாயு தவித்தான். தன் தம்பியின் துன்பத்தைத் துடைக்க விரும்பிய சம்பாதி தன் சிறையை விரித்து உயரப் பறந்து சென்று, தன் நிழலில் சடாயு பறந்து வருமாறு செய்தான். அதனுல் கதிரவனின் வெங்கதிர்கள் சிறகுகளில் நேராக நன்கு தாக்கினமையின் அவன் சிறகுகள் கரிந்தன. ஆதலின் சம்பாதி கீழே விழுந்தான். என்று வரலாறு கூறப்படுகின்றது. அச் சம்பாதி தங்கிய இடத்தைச் சுற்றி இருந்த வனம் சம்பாதி வனம் எனப்பட்டது. சம்பாதி வனம் என்று பெயர் வந்ததற்கு வேருெரு காரணமும் ஊகிக்கப் படுகின்றது. காவிரிப் பூம் பட்டினத்திற்கு அருகில் உள்ளது புள்ளிருக்கும் வேளூர் எனப்படும் வைத்தீசுவரன் கோவிலாகும். அதற்குச் சம்பாதி புரம் என்றும் வேருெரு பெயர் உண்டு. அங்குக் கோயில் கொண்ட இறைவனை ஒரு யோசனை தூரத்திலிருந்து பூக்கொணர்ந்து சம்பாதி பூசித்-

தது என்று கூறப்பட்டுள்ளது. காவிரிப்பூம் பட்டினத்தின் இவ் வனத்திலிருந்தே சம்பாதி பூக்கொணர்ந்ததாகக் கருத இடமிருக்கின்றது. எனவே சம்பாதி பூக்கொய்த வனத்தையே சம்பாதி வனம் என்று வழங்கியிருத்தலும் கூடும். தீண்டி வருத்தும் தெய்வம் ஒன்று அவ்வனத்தைக் காத்து வந்தது. அது மிகப் பழமை வாய்ந்தது. தாக்கும் தன்மை வாய்ந்த அணங்கு அவ்வனத்தைக் காவல் புரிந்து வந்தமையின் மக்கள் அங்குச் செல்வதில்லை.

சம்பாதி வனத்தை அடுத்துக் கூறப்படுவது கவேர வனமாகும். கவேரர் என்ற முனிவர் தவஞ் செய்த வனம் கவேர வனம் என்று வழங்கப்பட்டது. கவேரர் என்பவர் யோகிகளில் சிறந்த ஒரு அரசத் துறவி யாவர். இவரது தவத்தினாலும் முயற்சியினாலுமே காவிரி சோழ நாட்டில் பெருக்கெடுத்து ஓடி வந்தது என்றும், கவேரருடைய முயற்சியால் வந்த அந்த ஆற்றைக் கவேரரின் மகள் என்று கூறலாம் என்றும், அது பற்றியே அதற்குக் காவேரி என்று பெயர் வந்தது என்றும் ஆசிரியர்கள் கூறுவர். அன்றியும் கவேரர் காவிரியின் தந்தை என்றும் அழைக்கப்படுகின்றார். கவேரர் இருந்து தவஞ் செய்தமையால் அவரது பெயருடன் விளங்கிய இவ்வனத்தையும் பழமை வாய்ந்த தாக்கணங்கு ஒன்று காவல் புரிந்து வந்ததாகச் சொல்லப்படுகின்றது. ஆதலின், மக்கள் அவ்வனத்திலும் புக அஞ்சினர்.

எனவே, மேற்கூறிய நால்வகை வனங்களில் ஒன்று அரசனுக்கு உரியதாயிற்று ; மற்றொன்று தேவர்க்கு உரியதாயிற்று. ஏனைய விரண்டிலும் தாக்கும் அணங்கு நின்றமையின் யாரும் செல்வதில்லை. ஆதலால், மக்கள் யாவரும் விரும்பிப் புகுகின்ற வனம் உவவனமே என்று சாத்தனார் மணிமேகலையில் கூறியுள்ளார்.

உவவனம் பலவிதமாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு அன்னப் பறவைகளும், மயிலும், கிளியும், கூட்டங் கூட்டமாக வாழ்ந்தன; குரவம், வகுளம், வெட்சி, புன்னை, தளவம், அசோகு, வேங்கை, சண்பகம், இலவம் முதலிய பல வகையான பூக்கள் பூத்திருந்தன. பலவகைப் பூக்களின் மணம் அங்கு வீசியது. பல நிறம் வாய்ந்த பூக்கள் இலைகளுடன் விளங்கிய காட்சி, சித்திரத் தொழிலின், நுட்பமறிந்தோன் ஒருவன் தன் கைத்திறனை யெல்லாம் காட்டி எழுதிய சித்திரத் தொழில் அமைந்த துகில் போல் இருந்தது. அப்பூக்கள் கீழே சிதறிக் கிடந்தமையின் அங்கு நடந்து செல்லும் மகளிரின் மெல்லிய அடிகள் துன்பம் உறுவதில்லை. அவ்வனத்தில் பூக்கள் யாவும், அருளும், அன்பும், உயிர்களைக் காக்கும் மேற்கோளும் கொண்ட புத்த தேவனின் கட்டளையினால் பூத்தன என்று சொல்லப்படுகிறது.

உவ வனத்தில் ஒரு பளிக்கறை மண்டபம் இருந்தது. அம் மண்டபம் தன்னுட் புகுந்தவர்கள் எழுப்பும் ஓசையை வெளிப்படுத்தாமல்

அவர்கள் உருவத்தை மட்டும் வெளிப்படுத்தும் அப் பளிங்கிற்கு ஒலியைத் தடுக்கும் வன்மை இருந்தது. ஆயின் ஒளியைத் தடுக்கும் தன்மையை அது பெறவில்லை. மணிமேகலை மலர் கொய்ய உவ வனம் புக்க காலத்தில் உதயகுமரன் அவளைத் தேடி ஆங்கு வந்தான். அவனுக்கு அஞ்சிய மணிமேகலை இப்பளிக்கு மண்டபத்தினுள்ளேயே புகுந்து தாழிட்டுக் கொண்டாள். உள்ளிருந்த மணிமேகலையைப் பளிங்கினூடே உதயகுமரன் கண்டான்; எனினும் உட்செல்ல வழியறியாது திரும்பினான்.

மேற்காட்டிய பளிக்கறை மண்டபத்தினுள் ஒரு தாமரைப் பீடிகை இருந்தது. தாமரைப் பீடிகை என்பதைப் பதுமபீடம் என்பர். அதைப் புத்தரின் பாத பீடம் என்றும் வழங்குவதுண்டு. அங்குப் புத்த பிரானின் பாத அடையாளம் ஒரு பீடத்தில் இருந்தது. அப் பீடத்தில் அரும்புகளை இட்டால் அவை மலரும். அலர்ந்த பூக்களை யிட்டால் எத்துணையாண்டுகள் கழியினும் அவை வாட மாட்டா. வண்டுகளும் அவற்றை மொய்ப்பதில்லை. ஓர் தெய்வத்தை முறைப்படி வணங்கி அப் பீடிகையில் ஒரு மலரை இட்டால் அம்மலர் அத் தெய்வத்தின் அடியை அடையும். ஒரு கடவுளையும் கருதாது ஒரு மலரை இட்டால் அஃது எங்கும் செல்லாது அங்கேயே கிடக்கும். மனம் அறியாது நிகழும் கருமங்களால் அறமும் பாவமும் உளவாகா என்பதை விளக்க வேண்டி

மயன் இவ்வாறு மலரிட்டுக் காட்டினன். எனவே இத்தகைய தன்மையை அப் பீடிகைக்கு அமைத்தவன் மயனுவான்.

மேற்கூறிய தாமரைப் பீடிகையைத் தன்னிடத்தே கொண்டிருந்தமையின் உவவனம் தெய்வத் தன்மை வாய்ந்து விளங்கியது. அங்கே செல்வோர்க்கு யாதொரு தீங்கும் நிகழ்வதில்லை. இவ்வனத்திற்குத் தான் மணிமேகலை செல்லலாம் என்றும், ஏனைய வனங்களுக்குச் செல்லுதல் கூடாது என்றும் சுதமதி மாதவிக்குக் கூறினுள்.

உவவனத்தின் இயற்கை அழகைச் சாத்தனூர் அழகுபடப் புனைந்துரைக்கின்றூர். அவ்வனத்தில் இருள் மிக்க இடங்கள் பல இருந்தன. சூரியனுக்கு அஞ்சி ஓடிய இருள் அங்கு வந்து மறைந்தது. அங்கு வெயில் நுழைதல் இல்லை. அங்கிருந்த மரங்கள் நெருங்கி யிருந்தமையின் அவற்றினூடே குயில்களும் நுழைந்தே செல்லும். அங்குத் தும்பி, வேய்ங்குழலின் ஓசையோ என்று கேட்டோர் நினைக்கும் வண்ணம் ஒலி எழுப்பியது. வண்டு, யாழின் இன்னிசை போன்ற இசையைக் கிளப்பியது. அவ்விசைக்கு ஏற்ப மயில் ஆடியது. மயில் ஆடுங்கால் சம்பங் கோழி தன் குரலை எழுப்பியது. சம்பங் கோழியின் குரல் முழவொலி போன்றிருக்கும். எனவே அதன் குரல் மயிலின் ஆடலுக்கு ஏற்ப எழுப்பப் படும் முழவொலி போன்றிருந்தது. அதே சமயத்தில் கொம்பில் இருந்த கருங்குயில் தன் இனிய

குரலுடன் ஆடலுக்கும், முழவுக்கும், இன்னிசைக் கருவிகட்கும் ஏற்பப் பாடியது. இவ்வாறு குழல், யாழ், முழவு ஒலிகளுக்குப் பொருந்துமாறு ஆடலோடு கலந்து நிகழ்ந்த இன்னிசையை மரங்களில் இருந்த மந்திகள் கேட்டு மகிழ்ந்தன. ஆண்டிருந்த குளத்தின் நடுவில் தாமரைப் பூவில் வீற்றிருந்த அரச அன்னமும் இதனைக் கண்டுங் கேட்டும் மகிழ்ந்தது. இவ்வாறு உவவனம் புலவர் புகழுரையைப் பெற்றுப் பொலிந்தது.

காவிரி தான் செல்லும் இடங்களி லெல்லாம் சோலைகளை விரித்துச் செல்லும் என்றும், அது பற்றியே காவிரி என்ற பெயரை அது பெற்றது என்றும் யாம் முன்னரே கூறினோம். காவிரியின் வண்டல் மண் வந்து படியும் கழிமுகத் தீவினிடத்தே சோலைகள் கவினுற அமைந்திருந்ததில் வியப்பு ஒன்றுமில்லை. இவ்வகை வனங்களைக் கொண்ட புகாரின் அழகினை நம் போன்றவர்களால் புனைந்துரைக்க இயலாது.

# 6. வீதிக் காட்சி

புகாரின் இரு பெரும் பிரிவுகளைப் பற்றியும் ஆண்டிருந்த பலவகை வீதிகளைப் பற்றியும் அறிந்தோம். அரச வீதிகள், தேர் வீதிகள், கூல வீதிகள் முதலிய பலவகை வீதிகள் புகாரில் அமைந்திருந்தன என்பதையும் கூறினோம். அத்தகைய வீதிகளின் காட்சியை ஆசிரியர் சாத்தனார் அழகுறப் பாடுகின்றார். அச் செய்தியிலிருந்து நாம் காவிரிப்பூம் பட்டினத்தின் நாகரிகச் சிறப்பைப் பற்றியும், மக்கள் வாழ்க்கையைப் பற்றியும் அறிய இடமிருக்கின்றது. மணிமேகலை மலர் கொய்ய உவவனம் செல்லத் தொடங்கினாள். அவள் சென்ற வீதியில் நிகழ்ந்த காட்சிகளையே சாத்தனார் வர்ணிக்கின்றார்.

அவ்வீதியின் ஓர் புறத்தே பித்தன் ஒருவன் வருகிறான். அவன் அலரிமாலையைத் தோளிலே கட்டியிருந்தான் ; எருக்கம் பூமாலையைக் கழுத்தில் போட்டிருந்தான் ; கிழிந்த துணியொடு மரச்சுள்ளிகளைச் சேர்த்துக் கட்டி அதனை உடையாக உடுத்தி யிருந்தான் ; உடல் முழுவதும் வெண்ணீறும், சந்தனமும் பூசியிருந்தான் ; கண்ணிற் கண்ட எல்லோருடனும் பொருளற்ற சொற்களைப் பேசினான் ; அழுதான் ; விழுந்தான் ; அரற்றினான் ; கூவினான் ; தொழுதான் ; எழுந்தான் ; சுழன்றான் ; ஓடினான் ; ஒரு புறத்தே ஒதுங்கி நிமிர்ந்து நின்றான் ; தன் நிழலைச் சினந்தான். அத்தகைய பித்தனின் பெருந்துயர் நிலையைக் கண்டு பலர் வருந்தி நின்றனர்.

அவ் வீதியின் ஒரு சார் பேடிக்கோலத்துடன் கூத்தொன்று நிகழ்ந்தது. இதற்கு 'பேடு' என்று பெயர். பேடு என்பது புறநாடகங்கள் பதினொன்றனுள் ஒன்று. இப்பேடு, உமையின் காரணமாக வாணன் என்ற அசுரனால் சிறை வைக்கப்பட்ட தன் மகன் அநிருத்தனைச் சிறையிலிருந்து விடுவித்து, மன்மதன் சோ என்னும் நகரத்தில் ஆடிய ஆடல் ஆகும். அவ்வாடலை ஆடிய பேடிக்கு வளைந்த மோவாய் இருந்தது. கண்டோர் மயங்கும் பூவினை யணிந்த கூந்தல் இருந்தது. பவளம் போல் வாய் சிவந்திருந்தது. வெள்ளிய ஒளி பொருந்திய முறுவல் முகத்தில் தவழ்ந்தது. ஒளி தங்கிய செவ்வரி பரந்த நீண்ட கண்கள் இருந்தன. சங்கினாற் செய்த தோடு காதில் மின்னியது. புருவம் கரு நிறத்துடன் ஒழுங்காக இருந்தது. நெற்றி வளைந்து பிறைபோன்று இருந்தது. கைகள் காந்தள் பூவைப் போலச் சிவந்து அழகுடன் இலங்கின. அழகிய நுண்ணிய இடை இருந்தது. முழுந்தாள் அளவாக உடை அமைந்திருந்தது. இவ்வாறு பேடிக் கோலம் வருணிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பேடிக் கோலத்துடன் பேடு ஆடப்பட்டது. அதைக் கண்டு பலர் வியந்து மகிழ்ந்து நின்றனர்.

அவ் வீதியின் மற்றொரு சார் ஒரு பெருங் கூட்டம் நின்றது. அக் கூட்டத்தினர் ஆண்டு மாடங்களில் வரையப் பெற்றிருந்த சித்திரங்களைக் கண்டு களித்து நின்றனர். அவற்றுள் தேவர்கள் முதலாக எல்லா வகையான உயிர்களுக்கும் உவமையாகப் பல சித்திரங்கள் அமைந்திருந்தன

அவை கண்டோர் கண்களை கவர்ந்து அப்பால் செல்ல விடாமல் தடுத்தன. அழகிய பொருள் ஒன்றைக் கண்டோர் எளிதில் அதைவிட்டு அகலுவாரோ? அச்சித்திரங்களைக் கண்டோர் வைத்த விழியை வாங்காமல் இருந்தனர்.

வீதியின் புறம்பொரு சார் ஒரு பெருங் கூட்டம் நின்றது. அங்கு ஒரு குழந்தை காணப் பட்டது. அது பொன் அரை நாணில் கோத்த மணிக் கோவையுடனும், வெண்சிறுகடுகை அரைத்து அப்பிய நெய்யை அணிந்த மயிர்முடியுடனும் நின்றது. குழந்தைகளைப் பேய் தீண்டாமல் தடுக்கும் பொருட்டு அவர்களின் மயிர் முடியில் நெய் யணிந்து வெண்சிறு கடுகை அப்பும் வழக்கம் அக் காலத்தில் உண்டு. இக்காரணம் பற்றியே வெண் சிறுகடுகை 'கடிப்பகை' என்பர். கடி என்ற சொல்லிற்குப் பேய் என்பது பொருளாகும். அக்குழந்தையின் மயிர்ப்புறத்தைச் சுற்றியவாறு மூன்று கோவையாகிய முத்து வடம் தொங்கியது. அதன் வாயிலிருந்து வெளிவரும் இனிய குதலைச் சொல்லுடன் சின்னீர் சொரிந்தது. அஃது அக் குழந்தையின் மார்பிலே அணிந்த ஐம்படைத் தாலியை நனைத்தது. ஐம்படைத் தாலி என்பது குழந்தைகளின் மார்பில் தொங்கும் ஒரு வகை அணியாகும். காதற் கடவுளாகிய திருமாலின் சங்கு, சக்கரம், தண்டு, வாள், வில் ஆகிய ஐம் படைகளும் பொன்னாற் செய்யப் பெற்றுத் திகழும் அணியைக் குழந்தைகளின் கழுத்தில் அணி விப்பது உண்டு. அக் குழந்தை தளர் நடையுடன் வருங்கால் அது உடுத்த ஆடையும், மணிக்

கோவையும் கீழே புரண்டன. இத்தகைய கோலத்துடன் கூடிய குழந்தை ஒன்றைச் சில பெண்கள் தேரின்மேல் அமைக்கப்பட்ட யானையின் மீது ஏற்றுகின்றனர். அவ்வளவில் அவர்கள் 'முருகனுக்குத் திருவிழா தொடங்கிவிட்டது. பாருங்கள் பாருங்கள்!' என்று கூவுகின்றனர். இக்காட்சியைக் கண்டு இன்பமுற்றே அப்பெருங் கூட்டம் அங்கு நின்றது.

மேற் காட்டியவாறு காவிரிப்பூம் பட்டினத்தின் வீதியின் காட்சி சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இதனின்றும் தெருக்களில் கூத்தாடும் வழக்கம் புகாரில் இருந்து வந்தது என்பதும், மாடங்களில் அழகிய சித்திரங்கள் வரையப்பெற்றிருந்தன என்பதும், மேலும் பல செய்திகளும் தெரிய வருகின்றன.

# 7. இந்திர விழா

ஒரு நாடு சிறப்புடன் விளங்கி வரும் உண்மையை அந் நாட்டில் நிகழ்கின்ற விழாக்களின் வாயிலாக நன்கு உணரலாம். பழந்தமிழ் நூல்களில் ஒரு நகரத்தைப் பற்றிச் சிறப்பிக்கும் பொழுதெல்லாம் அங்கு நிகழ்ந்த விழாக்களைப் பற்றியும் சிறப்பிக்கப்பட்டுள்ளன. 'விழவு மலி மூதூர்' 'விழவரு மூதூர்' என்று பயின்று வரும் பல சொற்றொடர்கள் இதனை நன்கு வலியுறுத்துவனவாம். ஒரு நகரமக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கின்ற காலத்தில் விழாக்கொண்டாடுதல் இயற்கையே யாகும். பஞ்சத்திலும், பசியிலும் துன்பமுற்று வாழும் நகரத்தார் எவ்விதமான நன்றினையும், விழாவினையும் கொண்டாட முன் வரமாட்டார்கள். எனவே ஒரு நகரத்தில் பல விழாக்கள் கொண்டாடப்பட்டால் அந்நகர மாந்தர் பசியும், பிணியும் இன்றி வாழ்ந்து வந்தனர் என்பதை நன்கு அறியலாம்.

இக்காலத்தில் மக்களிடையே பல வகையான திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அதிலும் சிறப்பாகத் தமிழ் நாட்டில் பெருங் கோயில்கள் அமைந்துள்ள இடங்களில் பெரு விழாக்கள் நடைபெறுகின்றன. விழாக் காலங்களில் மக்கள் பகை நீங்கி ஒன்றுபட்ட மனத்தினராய் மகிச்சியுடன் பலவகையான ஆட்டங்களில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு விழாக் கொண்டாடுதல் சாலச் சிறந்ததாகும். பெருங் கோயில் ஒன்று

உள்ள ஊரில் பெருந் தேரினைப் புனைந்து, நகர வீதிகளில் இழுத்து வருதல் இயல்பாக உள்ளது. அது காலையில் அப் பொதுப் பணியில் மக்கள் ஈடு படுகின்றனர். அவ்வளவில் அவர்கள் தத்தம் சாதி, நிறம், மொழி வேற்றுமைகளை மறக்கின்ற னர்; பகையை மறக்கின்றனர்; விழாவினைச் சிறப் புறச் செய்வதில் கண்ணுங் கருத்துமாயுள்ளனர். எனவே மக்களிடையே உள்ள மன வேற்றுமை களையும், பிணக்குகளையும் விழாக்கள் ஒருவாறு ஒழிக்கின்றன என்பதை உணரலாம். பழந் தமிழ் நாட்டில் பல பெரு விழாக்கள் கொண்டாடப் பட்டன. அவ்வாறு புகாரில் நிகழ்ந்த விழாக் களுள் தலை சிறந்த விழா இந்திர விழாவாகும். அஃது எவ்வாறு புகார் மக்களால் கொண்டாடப் பட்டது என்பதை உணர்தல் இன்றியமையாத தாகும். அச் செய்தியிலிருந்து அந் நகர மக்களின் பழக்க வழக்கங்களும், நடையுடை பாவனைகளும் நன்கு வெளிப்படுகின்றன.

ஆசிரியர் தொல்காப்பியனார் ஒவ்வொரு நிலத் திற்கும் ஒவ்வொரு தெய்வத்தினைக் கூறியுள்ளார். குறிஞ்சி நிலத்திற்குக் குமரனையும், முல்லை நிலத் திற்கு மாயோனையும், மருத நிலத்திற்கு இந்திரனை யும், நெய்தல் நிலத்திற்கு வருணனையும் தெய்வங் களாக அவர் வரையறுத்துள்ளார். மருத நிலம் என்பது வயலும் வயல் சார்ந்த இடங்களும் ஆகும். எனவே மருத நிலத்திற்கு மழை மிகுதி வேண்டும். நீர் வளம் தவறுதல் கூடாது. மழைக்கு உரிய கடவுள் இந்திரனாவான். ஆத லின் காவிரிப்பூம்பட்டினத்தவர், மழை வளந்

தவறாது இருத்தற் பொருட்டு, அம் மழைக்குரிய கடவுளாகிய இந்திரனுக்கு விழா எடுத்தலை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

புகாரை ஆண்ட சோழ அரசர்களில் ஒருவன் தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன் என்பவன் ஆவான். தேவர்கட்குப் பகைவர்களாகிய அசுரர்கள் வானில் அசைகின்ற மூன்றுமதில்களில் இருந்து வந்தனர். அவர்களால் மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும் பல தீங்குகள் விளைந்தன. அவர்களையும், அக் கோட்டைகள் மூன்றையும் அச்சோழன் அழித்து வீரவளையை அணிந்த தோள்களுடன் விளங்கினான். அக்காரணம் பற்றி அவன் 'தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். இதற்கு 'அசைகின்ற மதில்களை அழித்த வீர வளையணிந்த தோள்களையுடைய சோழன்' என்பது பொருளாகும். அவன் அகத்திய முனிவரின் அரிய மாணவன். அவருடைய மொழிப்படி அச்செம்பியன் இந்திரனை வணங்கி, அவ்விந்திரன் பொருட்டுத் தான் புகாரில் விழாக் கொண்டாடப் போவதாகவும், விழா நடைபெறும் இருபத்தெட்டு நாட்களிலும் தன்னகரத்தே வந்து தங்கியருளுமாறும் அவனை வேண்டினான். விண்ணவர் தலைவனும் அதற்கு உடன்பட்டான். புகாரில் மழைவளம் தப்பாது நிறைத்தற் பொருட்டே அவ்வரசன் இவ் விழாவைத் தொடங்கினான் என்று மணிமேகலை நூல் கூறுகின்றது. எனவே அச் சோழனால் தொடங்கப்பெற்ற இந்திர விழா ஆண்டுதோறும் இருபத்தெட்டு நாட்கள்

கொண்டாடப் பட்டது. புகாரில் இந்திர விழாவினைச் செய்யத் தவறினால் இந்திரன் ஏவலால் ஆங்கு உறையும் நாளங்காடிப் பூதமும் சதுக்கப் பூதமும் அந் நகரத்திற்குத் துன்பத்தை விளைவிக்கும் என்பது அந்நகரத்தவர் கருத்தாகும்.

இந்திர விழா ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் நிறைமதி யன்று தொடங்கப் பெறும். கோவலன் மாதவியைப் பிரிவதற்குக் காரணமாக இருந்த இந்திர விழா அவ்வாண்டு சித்திரைத் திங்களில் சித்திரையும், நிறை மதியும் கூடிய அன்று தொடங்கப்பட்டது என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இந்திர விழாத் தொடங்கும் நன்னாளுக்கு முன்னதாக அந் நகரத்து ஆன்றோர் பலர் ஒன்று கூடுவர். சமயக் கணக்கரும், காலங்களை எண்ணிச் சொல்லும் சோதிடரும், அமயக் கணக்கரும், மக்களின் கண்களுக்குப் புலப்படாத தேவர்களும், மொழி வேறுபட்ட மக்களும், ஐம் பெருங் குழுவினரும், எண் பேராயத்தாரும் தவறாது இக் கூட்டத்திற்கு வருவர். காவிரிப்பூம் பட்டினத்தில் பல பரதேசத்தார், வாழ்ந்து வந்தனர் என்பதை நாம் முன்னரே அறிந்தோம். அவர்களே மொழி வேறுபட்ட மக்களாவர். அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர் என்போர் ஐம் பெருங் குழுவினர் எனப் படுவர். கரணத்தியலவர், கரும விதிகள், கனகச் சுற்றம், கடை காப்பாளர், நகர மாந்தர், படைத் தலைவர், யானை வீரர், குதிரை வீரர் ஆகிய எண்மர் குழுவினர் எண்பேராயத்தார் எனப்படுவர். தேவரும் அக் கூட்டத்திற்கு வந்திருப்பர் என்பது

அக்காலத்தார் நுணிபாகும். அவர்கள் ஒன்று பட்ட மனத்தினராய் அவ்வாண்டு இந்திர விழா வினை எங்ஙனம் சிறப்புறக் கொண்டாட வேண்டு மென்று ஆராய்ந்து முடிவு செய்வர்.

பின்னர் வச்சிரக்கோட்டத்திலிருக்கும் மங்கல முரசை யானையின் பிடரியிடத்தே ஏற்றப்படும். வச்சிரக் கோட்டம் என்பது இந்திரனின் வச்சி ராயுதம் நிற்கும் கோயிலாகும். அந்த யானையின் மேல் முரசறைவோன் ஏறி அமர்ந்து நகரை வல மாக வருவான். அது பொழுது அவன் நகர மக்களுக்கு விழாவின் தொடக்கத்தினையும், முடி வையும் சாற்றுவான். அவ்வாறு கூறுங்கால் அவன் 'இலக்குமி விரும்பித் தங்கும் மூதூர் வாழ்க ; மேகம் மாதந்தோறும் தவறாது மும்மாரி பொழிக ; அரசன் செங்கோலை யுடையவனாகுக,' 'இந்திர விழா நிகழும் நாட்களில் இந்திரனுடன் எல்லாத் தேவர்களும் பொன்னுலகம் வறிதாகு மாறு இங்கு வந்து தங்குவர். ஆகவே இவ் விழாவினைச் சிறந்தமுறையில் கொண்டாடுங்கள். இந் நகரத்தில் பசியும் பிணியும் நீங்குக. வசியும் வளனும் சுரக்க' என்று கூறுவான். அன்றியும் அம்முரசறைவோன் விழாவினை எவ்வாறுகொண் டாட வேண்டும் என்பதைப்பற்றியும் நகர மக்கள் செய்யவேண்டுவன யாவை என்பதைப் பற்றியும் விளக்கமாகக் கூறுவான். அவன் நகர் வலம் வருங்கால் வாள் வீரர்கள் பலர் அவனைச் சூழ்ந்திருப்பர். தேரும், மாவும், களிறும் அவனைச் சுற்றிச் செல்லும்.

இந்திர விழா காவிரிப்பூம் பட்டினத்தில் இருபத்தெட்டு நாட்கள் கொண்டாடப்பட்டது. அது காலையில் மக்கள் வீதிகள் தோறும் தோரணங்கள் கட்டுவர்; எல்லா இடங்களிலும் பூரண கும்பமும் பொற்பாலிகைகளும், பாவை விளக்குகளும் பரப்பி வைப்பர்; குலைக் கமுகினையும், வாழையையும், வஞ்சிக் கொடியையும், கரும்பையும் நடுவர்; வரிசையாக அமைந்த தூண்கள் தோறும் முத்துமாலைகளைத் தூக்குவர்; வீதிகள் தோறும், மன்றங்கள் தோறும் பழ மணல் மாற்றிப் புதுமணல் பரப்புவர்; மாடங்களிலும் வாயில்களிலும் பல நிறமுள்ள துகிற்கொடிகளைக் கட்டுவர். இவ்வாறு நகரம் அழகுடன் விளங்கும்.

விழாத் தொடங்கும் நாளில் மறக்குடி மகளிர் பலர் கூடி நாளங்காடியை அடைந்து, அங்குத் தங்கியுள்ள நாளங்காடிப் பூதத்திற்கு அவரை, துவரை முதலியன சேர்த்து வேகவைத்த புழுக்கலையும், எள்ளுருண்டையையும், நிணத்துடன் கலந்த சோற்றையும், பொங்கற் சோற்றையும் கள்ளையும் படைப்பர்; நறும்புகை எடுப்பர்; நோயும், பகையும் நீங்கி மழையும், வளமும் மிகுந்து மக்கள் இன்புற்று வாழுமாறு வாழ்த்துவர். பின்னர் மருவூர்ப் பாக்கத்து வீரர்களும், பட்டினப் பாக்கத்து வீரர்களும் கூடி அங்குச் சென்று பராவுவர். அங்கு வீரர் தம் உயிரையே பலியாகக் கொடுப்பதும் உண்டு. இதனை அவிப் பலி என்பர்.

புகாரைச் சிறப்புற ஆண்ட கரிகாலன் ஒரு முறை வஞ்சி சூடி வடநாடு சென்றான். அவன்

தென்னாட்டு மன்னர்கள் யாவரையும் வென்று விட்டமையின், வடநாட்டிலாயினும் பகையைப் பெற்றுப் போர் செய்து வெற்றிச் சிறப்பை எய்தி மகிழ எண்ணியே வடநாடு சென்றான். அவ்வாறு சென்றவன் இமயமலை வரையிற் சென்றான் அவன் விருப்பத்திற்கு இடையூறாக அம்மலை குறுக்கிட்டு நின்றது. எனவே சினங்கொண்ட கரிகாலன் தனது புலிப் பொறியை அதன் மீது பொறித்து மீண்டான். அவ்வாறு மீளுங்கால் சோணையாற்றங் கரையிலுள்ள வச்சிர நாட்டரசன் ஒரு கொற்றப் பந்தரைத் திறையாகக் கொடுத்தான். அவன் கரிகாலனுடன் பகையும், நட்பும் கொள்ளாத அயலான். கொற்றப் பந்தர் என்பது முத்துப் பந்தராகும். இவ்வாறு முத்துப் பந்தருடன் வந்த கரிகாலனை மகதநாட்டரசன் எதிர்த்துத் தடுத்தான். கரிகாலன் அவனை வெல்லவே அவன் திறையாகப் பட்டி மண்டபம் ஒன்றைக் கொடுத்தான். பட்டி மண்டபத்தை வித்தியா மண்டபம் என்றும், ஓலக்க மண்டபம் என்றும் கூறுவர். பட்டி மண்டபத்தில் ஏறிச் சமயவாதம் நிகழ்த்துதல் உண்டு. பட்டி மண்டபத்துடனும், முன் பெற்ற கொற்றப் பந்தருடனும் வந்த கரிகாலனை அவந்தி நாட்டரசன் மகிழ்ச்சியுடன் வரவேற்றான். அவன் கரிகாலனின் நண்பனாவான். அவன் சிறந்த வேலைப்பாடுகள் அமைந்த தோரணவாயில் ஒன்றைக் கரிகாலனுக்குத் தன் நட்பிற்கு அறிகுறியாக அளித்தான். கரிகாலன் தன் வட நாட்டு யாத்திரையில் பெற்ற கொற்றப் பந்தர்,

பட்டி மண்டபம், வாயில் தோரணம் ஆகிய மூன்றினோடும் புகார் புகுந்து அவற்றை ஒரு மண்டபத்தே வைத்தான். அவை பொன்னினாலும் மணியினாலும் புனையப்பட்டவையெனினும் கம்மியரால் செய்யப்படாதவையாகும். அம்மூன்றனை அளித்தவர்களின் மூதாதையர் செய்த உதவிக்குக் கைம்மாருக மயன் என்னும் தெய்வத் தச்சனால் அவை செய்யப்பட்டன. வெவ்வேறு இடங்களில் தனித்திருந்த இவை கரிகாலனது வீரத்தால் ஒன்று சேர்ந்து புகாரில் ஒரே மண்டபத்தில் வைக்கப்பட்டன.

மேற் கூறிய கொற்றப் பந்தர், பட்டி மண்டபம், வாயில் தோரணம் ஆகியவை வைக்கப்பட்ட மண்டபத்திலும், முன்னரே நாம் விளக்கிய வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் நின்ற மன்றம், பூது சதுக்கம், பாவை மன்றம் ஆகிய ஐவகை மன்றங்களிலும் விழாக்காலத்தில் மக்கள் அரிய பலியினை இடுவர். சிவபெருமான், முருகன், பலதேவன், மாயோன் இந்திரன் ஆகிய கடவுள்களின் கோயில்களில் ஓமம் வளர்க்கப்படும். சதுக்கப் பூதத்தின் கோயிலில் பலியிடுதல் உண்டு.

விழாத் தொடங்கிய அன்று இந்திரனுக்கு உரிய கற்பகத்தரு நிற்கும் கோயிலின் முன்னர் ஐராவதம் எழுதிய கொடியினை வானில் பறக்க விடுவர். ஐராவதம் இந்திரனது ஊர்தியாதலின் அவனது கொடியில் அஃது எழுதப்பட்டது. அதன் பின்னர் ஐம்பெருங் குழுவினர், எண் பேராயத்தார், அரச குமரர், வனிக குமரர், ஆகிய

பலர் யானைகளிலும், தேர்களிலும், குதிரைகளி லும் ஏறி ஒருங்கு திரண்டு சென்று இந்திரனது கோயிலை அடைவர். அங்குக் காவிரியின் சங்கமத் துறையிலிருந்து ஆயிரத்தெட்டுப் பொற் கலசங் களில் நீர் கொணர்ந்து வைக்கப் பெற்றிருக்கும். அந் நீரினால் அவர்கள் விண்ணவர் தலைவனை மஞ் சன மாட்டுவர். அக்காட்சியைக் கண்ட வானோர் தாம் துறக்கத்தில் செய்யும் சிறப்பினும் இது சிறந்தது என்று கூறி வியப்பர். அவ்வாறு மஞ்சன மாட்டுங்கால் "மன்னன் கொற்றம் கொள்க" என்று வாழ்த்துவர்.

திருவிழாத் தொடங்கிய நாள் முதல் அருகர், புத்தர் பள்ளிகளிலும், அறத்தினைப் புரக்கும் சாலை களிலும், மதிலின் வெளிப்புறத்திலுள்ள புண்ணி யத் தானங்களிலும் அறத்தின் கூறுபாடுகளை உணர்ந்த ஆன்றோர் தருமம் போதிப்பர். சமய வாதிகள் பலர் பட்டி மண்டபத்தில் பாங்குற ஏறித் தத்தம் சமய உண்மைகளைக் கூறிப் பிற சமயத்தவருடன் வாதம் புரிவர். நகர மக்கள் தம் பகைவர்களையும் நண்பர்களாகக் கருதி நட்புக் கொள்வர். அரசனோடு பகைத்துச் சிறைப்பட்ட மன்னர்கள் அத் திருவிழாவின் முதல் நாளில் சிறையிலிருந்து விடுதலை அடைவர். அவர்க்கு ஏற்ற சிறப்புகள் செய்யப்படும். கூத்தரும், குழல் வல்லோரும், யாழ் வல்லோரும், கண்டத் தாற் பாடும் பாணரும் சிறந்த இசை விருந்தினை யளிப்பர். விழாத் தொடங்கப்பட்டது முதல் இர வும், பகலும் மக்கள் குறுந்தெருக்களிலும், பெரு

வீதிகளிலும் மிக மகிழ்ச்சியுடன் விழாவினைக் கொண்டாடுவர்.

இவ்வாறு சித்திரா பூரணையன்று தொடங்கப்பட்ட திரு விழா இருபத்தெட்டு நாட்கள் நடைபெறும். நகரம் முழுவதும் அழகுடன் விளங்கும்; மங்களகரமாக இருக்கும். கோயில்களில் ஓமம் செய்யப்படும். மன்றங்களிலும், மண்டபங்களிலும், கோட்டங்களிலும் பலியிடப்படும். சிறைப்பட்டவர் விடுதலை அடைவர். அறநெறிச் சொற்பொழிவுகள் எங்கும் நிகழும். இசை ஒரு புறம் செறிந்து திகழும். இவ்விதமாக இருபத்தெட்டு நாட்கள் கடந்த பின் மறுநாள் மக்கள் அனைவரும் கடற்கரையைச் சேர்வர். அங்குக் கடலில் முழுகுதலும், ஆடல் பாடல்களில் திளைத்தலும் அந்நாள் முழுவதும் நிகழும். பல்வகையான சிறந்த உணவுகளை மக்கள் கடற்கரையில் உண்பர்.

தற்காலத்தில் விழாக்கள் கொண்டாடப்படும் முறையினையும், அக்காலத்தில் இந்திரவிழா கொண்டாடப்பட்ட முறையையும் நாம் நன்கு சீர் தூக்கிப்பார்த்தல் வேண்டும். கடவுளுக்குச் சிறப்பளித்தலும், கடவுட் பக்தியை மக்களுக்கு ஊட்டுதலும், அதன் வாயிலாகக் கடவுளின் அருளைப் பெறுதலுமே இக்காலத்து விழாக்களின் நோக்கங்களாக உள்ளன. இந்திர விழாவிற்கு இவை மட்டுமன்றி அகன்ற பல சிறந்த நோக்கங்கள் இருந்தன என்பதை நாம் நன்கு உணரலாம். விழாவின் காரணமாக நகரம் சுத்தம் செய்யப்படுகின்றது. வீடுகள் பழுது பார்க்கப் பெற்று, சுண்ணும்பு பூசப்பட்டு அழகுடன் விளங்குகின்

றன. வீதிகளில் பழ மணல் அகற்றிப் புது மணல் பரப்பபடுகின்றது. எனவே ஆண்டிற்கு ஒரு முறை விழாவினை முன்னிட்டு நகரின் சுகாதாரத்திற்கு ஏற்ற வசதிகள் மறைமுகமாகச் செய்யப் பட்டன. திருவிழாவின் பொழுது சிறைபட்டோரை விடுதலை செய்தல் ஒரு பெரிய அரசியல் நோக்கத்தைத் தன்னிடத்தே கொண்டுள்ளது. அது காரணமாகப் பல பகையரசர்கள் அரசனின் நண்பர்களாக மாற வழியுள்ளது. நகரமக்களும் பரதேசத்தாரும் விழாவின் காரணமாக ஒன்று கூடிப் பல பணிகளைப் புரிந்தனர். இதனால் அவர்களிடையே நட்பு வளர்கின்றது. பகை கொண்டோர் பகையை மறந்து உறவு கொள்ள இவ் விழா ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமைந்தது. மக்கள் தம் சாதி வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட இந்திர விழா பேருதவி செய்து வந்தது என்னலாம். அறநெறிச் சொற்பொழிவுகளும் சமய வாதங்களும் திருவிழாக் காலத்தில் நிகழ்ந்தன என்று அறிகின்றோம். எனவே இவ்விழாவினை ஒரு சாதனமாகக் கொண்டு மக்களிடையே அறவுணர்ச்சி பரப்பப்பட்டது என்பதும், பலவிதச் சமயங்களின் கருத்துக்கள் நன்கு மக்களுக்குப் போதிக்கப்பட்டன என்பதும் வெள்ளிடை மலை போல் விளங்குகின்றன. விழாக்காலத்தில் பலவித இசைகள் சிறந்து விளங்கின என்பதால் இசை வல்லோர் மக்களுக்கு எதிரே தம் திறமையைக் காட்ட ஒரு நல்ல வாய்ப்பைப் பெறுகின்றனர். இந்திர விழா நடக்குங்கால் நகர மக்கள் பல விடங்களில், பல சந்தர்ப்பங்களில் 'அரசன் வாழ்க;

அரசன் வெற்றி பெறுக' என்று வாழ்த்துகின்றனர். எனவே மக்களுக்கு அரச பக்தியை இவ்விழா சிறந்த முறையில் ஊட்டியது என்பதை நாம் தெள்ளிதின் உணரலாம். குடிகளுக்கு அரசனிடம் அன்பும் மதிப்பும் இருப்பின் அரசாங்கம் நன்கு நடைபெறுமன்றோ? அதன் பயனாக அரசனும் குடிகளும் இன்பமுடன் வாழ வழியிருக்கின்றதல்லவா? அரசனும் குடிகளும் ஒன்றுபட்டிருப்பின் அந்நகரத்தின்மேல் பகைவர் படையெடுக்க அஞ்சுவரன்றோ? இவ்வாறு பல சிறந்த நோக்கங்களுடன் புகாரில் இந்திரவிழா கொண்டாடப்பட்டது என்பதை உணருங்கால், இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த புகாரின் மக்களை நினைத்து நாம் இறும்பூதெய்தி, அத்தகையோர் வாழ்ந்த நம் தமிழகத்தைப் புகழ்வதில் தவறு உண்டோ?

# 8. வாணிகம்

புகாரில் வாணிகம் சிறந்த முறையில் நன்கு நடந்து வந்தது என்பதை நூல்களின் வாயிலாக நாம் அறியலாம். அங்குக் கடல் வாணிகமும், தரை வாணிகமும் உயர்ந்த முறையில் நடை பெற்று வந்தன. புகார் ஒரு துறைமுகப் பட்டினம் ஆக இருந்தது. புகார் என்ற சொல்லிற்கே ஆற்று முகம் என்பது பொருள் என்று முன்னரே குறித்தாம். எனவே ஆறு கடலொடு கலக்கும் இடத்தில் அமைந்த நகரம் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கியதில் வியப்பில்லை.

அந்நகரில் நிகழ்ந்த வாணிகச் சிறப்பைப் பட்டினப்பாலை என்ற நூல் சிறக்கக் கூறுகின்றது. சிறுவணிகர் முதலில் பிறரிடம் பொருள் கொடுத்துப் பெரிய அளவில் சரக்குகளைப் பெறுவது இயல்பு. அவ்வாறு புகாரின் வாணிகர்கள் பெறுங்கால் தாம் கொள்ளும் சரக்கைத் தாம் கொடுக்கும் பொருளுக்கு மிகையாகப் பிறரை வஞ்சித்து வாங்கமாட்டார்கள். பிறர்க்கு விற்குங் காலத்திலும் தாம் கொடுக்கும் சரக்கைத் தாம் வாங்கும் பொருட்குக் குறைவாகக் கொடுக்க மாட்டார்கள். வாணிகஞ் செய்வார் சிறப்புப் பெற விரும்பின் அதற்கு ஏற்ற வழியைக் கூறத் தொடங்கிய ஆசிரியர் திருவள்ளுவரும்,

> '' வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
> பிறவும் தமபோல் செயின் ''

என்று அருளியுள்ளார். வணிகர் பிறர் பொருளையும் தம் பொருள் போலப் பேணி வாணிகம் செய்

தால் அவர்கள் சிறப்புப் பெறுவர் என்பதே இக் குறட்பாவின் கருத்தாகும். குறட்பாவிற்குச் சிறந்த உரை எழுதிய உரையாசிரியராகிய பரிமேலழகரும் " பிறவும் தம போல் செய்தலாவது கொள்வது மிகையும், கொடுப்பது குறையுமாகாமல் ஒப்ப நாடிச் செய்தல் " என்று குறிப்பு எழுதியுள்ளார். புகாரின் வணிகர்கள் இத்தகைய குறிக்கோளைக் கொண்டு விளங்கினமையின் அங்கு வாணிகம் உயர்ந்தோங்கியது என்று கூறுதல் பொருந்தும்.

புகாரில் அயல் நாட்டு வாணிகம் நன்கு நடைபெற்று வந்தது. எனவே கடல் வாணிகத்தில் புகார் மக்கள் முன்னிலையில் நின்றனர் எனலாம். அந் நகர மக்கள் பலர் வாணிகத்தின் பொருட்டுக் கடல் கடந்து செல்லுதல் உண்டு. அங்கு வாழ்ந்த கற்புடைப் பெண்ணாகிய ஆதிரையின் கணவன் என்று குறிப்பிடப்பட்டுள்ள சாதுவன் என்பான் மரக்கலம் ஏறி வாணிகத்தின் பொருட்டுச் சென்ற செய்தியை மணிமேகலையினால் அறியலாம். அன்றியும் யவனர் பலர் புகாரில் வந்து தங்கியிருந்ததை முன்னரே குறிப்பிட்டோம். பரதேசத்தார் பல்லோர் ஆண்டுறைந்தனர் என்பதும் முன்னர்க் கூறப்பட்டது. அவர்கள் யாவரும் வாணிகத்தின் பொருட்டே புகார் வந்தனர்.

புகாரில் கடல் வாணிகம் இடைவிடாது நடந்துவந்தது. கடற்கரையில் பண்டசாலை இருந்த செய்தியைப் பட்டினப்பாலையால் அறியலாம். மேகம் கடலில் முகந்த நீரை மலையில் சொரிவதற்காகவும், மலையில் சொரிந்த நீரைக்கடலில் பரப்புவ

தற்காகவும் மாரிக்காலத்தில் மழை பொழிகின்றது. அது போலக் கடலில் அயல் நாடுகளிலிருந்து மரக்கலங்களில் வந்த பண்டங்கள் கரையில் ஏற்றப் படுகின்றன ; அப்பொழுதே அயல் நாடுகளுக்குப் பண்டங்களை மரக்கலங்களில் ஏற்றி அனுப்பப் படுகின்றன. இவ்வாறு இவ்வளவென்று கணக்கிட முடியாத பல பண்டங்கள் எல்லையில்லாமல் வந்து சேர்ந்தன. அவை பண்டசாலையில் வைக்கப்பட்டன. பண்டசாலைக்குப் பெரிய காவல் இருந்தது.

அவ்வாறு வந்து சேர்ந்த பண்டங்களுக்குப் பல எண்கள் போடப்படும். பிற நாடுகளிலிருந்து வந்த பண்டங்களுக்குச் சுங்கம் விதிக்கப்பட்டது. இஃது 'உல்கு' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டங்களுக்குப் புலி முத்திரையும் இடப்பட்டது. சோழ அரசனின் அடையாளப் பொறி புலியாதலால் இங்ஙனம் செய்யப்பட்டது.

கடல் வாணிகம் நன்கு நடக்கப் பல மரக்கலங்கள் இரவிலும் பகலிலும் புகாருக்கு வந்து கொண்டிருக்க வேண்டும். இரவில் வரும் மரக்கலங்களுக்குக் கரை யிருக்கின்ற இடத்தைக் காட்டும் "கலங்கரை விளக்கம்" காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்தது. கலங்கரை விளக்கம் என்பதற்கு "திக்குக் குறிகாட்டிக் கலத்தை அழைக்கிற விளக்கம்" என்று சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் குறிப்புரை எழுதியுள்ளார். எனவே இக் காலத்தில் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கும் நாகரிக நகரங்கள் போலவே பழங்காலத்துப் புகார் நகரமும் விளங்கியது என்று கொள்ளலாம்.

வெளி நாடுகளிலிருந்து வந்த பொருள்கள் புகாரின தெருக்களில் குவிந்தன. மரக்கலங்கள் பாய்கள் கட்டப்பெற்றுக் காற்றின் உதவியால் இயங்கின. இவ்வாறு கடலில் காற்றின் உதவியால் குதிரைகளும் மிளகுப் பொதிகளும் வந்தன. வட மலையில் தோன்றிய மணியும் பொன்னும் புகாரில் வந்து குவிந்தன. பொதியின் மலையில் தோன்றிய சந்தனமும் அகிலும் புகாரின் தெருக்களை அழகு படுத்தின. தென் திசைக் கடலின் முத்தும், கீழ்த்திசைக் கடலில் பிறந்த பவளமும் அங்கு வந்திருந்தன. கங்கை யாற்றுப் பகுதியிலிருந்து வந்த யானையும், மாணிக்கமும், முத்தும், பொன்னும், அங்கிருந்தன. அன்றியும் காவிரியில் உண்டான பொருள்களும், சிங்கள தேசத்தில் உண்டாகிய நுகர் பொருள்களும் மிகுதியாக அங்கு விளங்கின. கடாரம் எனப்படும் பர்மாவில் உண்டான நுகர் பொருள்களும் புகாரில் இறக்குமதி செய்யப்பட்டன. சீனம் முதலிய இடங்களிலிருந்து கருப்பூரம், பன்னீர், குங்குமம் முதலிய அரும் பொருள்களும் அங்கு வருவதுண்டு. இவ்வாறு பல வகையான பொருள்கள் நிலத்தின் முதுகு நெளியுமாறு திரண்டு விளங்கிய தெருக்கள் புகாரில் பல இருந்தன. எனவே புகாரில் செல்வம் தலைமயங்கிக் கிடந்தது என்று பட்டினப்பாலை கூறுகின்றது.

புகாரின் தெருக்களில் பலர் பலபொருள்களை விற்றுத் திரிந்தனர். கூலம் குவித்த கூல வீதியைப் பற்றி முன்னரே குறிப்பிட்டோம். இனிப் பிட்டு விற்போர், அப்பம் சுடுவோர், வெற்றிலை கட்டி

விற்போர், சுட்ட இறைச்சி பகர்வோர், எண்ணெய் விற்போர், மீன், உப்பு முதலியன விற்போர், ஆட்டு வாணிகர், கள்ளை விற்போர் முதலியபலர் புகாரில் இருந்தனர் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. புகாரில் காலைக்கடைத் தெருவை நாளங்காடி என்று அழைத்தனர் என்பதும், கொடுப்பவர் ஓதையும், கொள்பவர் ஓதையும் அங்கு மிக்கிருந்தன என்பதும் முன்னரே குறிப்பிடப்பட்டன. மாலைக் கடைத்தெருவை அல்லங்காடி என்பர். இவ்வாறு அயல் நாட்டு வாணிகம் சிறப்புற நடந்து வந்த புகார் செல்வத்திற் சிறந்து விளங்கியிருக்க வேண்டும் என்பது ஒருதலை.

# 9. பலவகைத் தொழில்கள்

ஒரு நாட்டைச் செல்வத்தில் சிறப்புற்று வாழுமாறு செய்வது கைத்தொழில்களும், வாணிகமுமேயாகும். இக்காலத்தில் கைத்தொழில்கள் மிகுந்த நாடுகள், வாணிகத்தில் சிறந்து, செல்வ நிலையில் உயர்ந்திருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். கைத்தொழில்கள் மிகுந்தால் வாணிகம் நன்கு வளரும். வாணிகத்தை மேற்கொண்டு வந்த அயலார் அரசாட்சி செய்வதை நாம் நன்கு அறிவோம். கைத்தொழிலில் சிறப்புற்ற நாடு சிறு நாடாக இருந்தாலும் அது பெரிய நாட்டுடன் போர் செய்யும் வலிமையைப் பெறுகின்றது.

புகார் நகரத்தில் பல கைத்தொழில்கள் சிறப்புற்று விளங்கின என்பது நூல்களால் அறியக் கிடக்கின்றது. மக்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதவை காற்றும், நீரும், உணவும் ஆகும். அவற்றிற்குப் பிறகு உடையே மனிதனுக்கு வேண்டுவதாகும். அத்தகைய ஆடைகளை நெய்வதில் நம் பழந்தமிழ் நாட்டவர் முன்னிலையில் நின்றனர். அவ்வாடைகள் மேன்மை வாய்ந்தும் விளங்கின.

"காம்பு சொலித்தன்ன அறுவை" என்று சிறுபாணாற்றுப்படையுள் உடையின் சிறப்புக் கூறப் பட்டுள்ளது. மூங்கில் ஆடையை உரித்தாற் போன்ற உடை என்பது அவ்வடிக்குப் பொருள் ஆகும்.

"புகை முகந்தன்ன மாசு இல் தூவுடை" என்பது திருமுருகாற்றுப்படை. புகையைக் கையால் முகந்தாற் போன்று மென்மை வாய்ந்த குற்றமற்ற தூயவுடை என்பது இவ்வடியின் கருத்தாகும். இவ்வாறே ஆடையின் நுண்மையை

"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி யன்ன அறுவை"

என்று பொருநராற்றுப்படை கூறுகின்றது. எங்கு இழை சென்றிருக்கின்றது என்று அறிய முடியாதவாறு நுட்பமாக அவ்வாடை அமைந்திருந்தது என்பதும், அதில் பூ வேலைகள் செய்யப் பட்டிருக்கும் என்பதும், பாம்புரி போல் அஃது இருந்தது என்பதும் இவ்வடிகளின் கருத்தாகும். சங்கச் செய்யுட்களில் பலவிடங்களில் ஆடையின் சிறப்பைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படு கின்றன.

மேற் காட்டிய நுட்பமான ஆடைகள் புகாரிலும் நெய்யப்பட்டுச் சிறந்து விளங்கின. புகாரில் வாழ்ந்த சாலியரின் இருப்பிடத்தைச் சிறப்பிக்கப் போந்த இளங்கோவடிகள்,

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கை"

என்கின்றார். காருகர் என்போர் சாலியர் அல்லது நெய்வோர் ஆவர். இங்கு மயிர் என்பதற்கு எலி மயிர் என்று அடியார்க்கு நல்லார் பொருள் எழுதியுள்ளார். அக்காலத்தில் 'எலிமயிர்ப் போர்வை' சிறந்திருந்தது என்பதைச் சிந்தாமணி முதலிய

நூல்களால் அறியக் கிடக்கின்றது. இந்த எலி மயிராடை சிறந்த கம்பளமாக இருந்தது என்றும், அது மிகக் குளிரையும் தாங்கவல்லது என்றும் பழந் தமிழ் நூல்கள் பகர்கின்றன. இத்தகைய பருத்தி, பட்டு ஆடைகளையும், எலிமயிர்ப் போர்வைகளையும் அரசரும், செல்வரும் விரும்பி வாங்கினர். எனவே புகாரில் இவற்றினால் பொருள் மிகுதியாகக் கிடைத்தது என்பதை உணரலாம்.

காவிரிப்பூம் பட்டினத்தில் பலவகையான கைத்தொழில்கள் ஓங்கி யிருந்தன. தொழிலில் வல்ல வேறு நாட்டு மக்களும் புகாருக்கு வந்து தமிழ்மக்களுடன் கலந்து தம் கைத் திறமைகளைக் காட்டி வந்தனர். மகதவினைஞர், மராட்டக் கம்மர், அவந்திக் கொல்லர், யவனத்தச்சர் ஆகியோர் தமிழ் நாட்டு வினைஞருடன் கூடி இனிமையாகப் பலவற்றைச் செய்து முடித்தனர். அவர்கள் செய்தவை காண்போர் கண்களைக் கவர்ந்தன. கண்ணகியின் காற்சிலம்பு சிறந்த வேலைப்பாடு உடையதாய்த் திகழ்ந்தது என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

புகாரில் வெண்கல வேலை செய்யும் கன்னார், செம்பு வேலை செய்யும் கன்னார், மரவேலை செய்யும் தச்சர், இரும்பு வேலை செய்யும் கொல்லர், மண்ணைக் குடமாக்கும் குயவர், பொன் வேலை செய்யும் உருக்குத் தட்டார், இரத்தின வேலை செய்யும் தட்டார், தையல்காரர், செம்மார் போன்றவர்கள் வாழ்ந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுவதை நாம் முன்னரே கூறியுள்ளோம்.

புகாரில் சித்திர வேலை சிறப்பு மிக்குத் திகழ்ந்தது என்று நூல்கள் கூறுகின்றன. அந் நகரின் வீதிகளில் மனைகள் யாவும் சுடு மண்ணால் கட்டப்பட்டு உயர்ந்து நின்றன. அவற்றிற்கு நீண்ட நிலைகள் இருந்தன. அத்தகைய மனைகளில் அழகிய சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. பலவகைத் தெய்வங்களைப் போலவும், மக்களைப் போலவும், பலவகைப்பட்ட விலங்குகளைப் போலவும் சித்திரங்கள் அங்கு அழகுடன் விளங்கின. அவை காண்போர் கண்களைத் தடுக்கும். இச்செய்தியையும் நாம் முன்னரே குறிப்பிட்டுள்ளோம். புகார் நகர வீதிகளில் பல வகை வாசனைப் பொருள்களைப் பலர் விற்றுத் திரிந்தனர் என்பதையும் முன்னரே நாம் கூறினோம். எனவே புகாரின் மக்கள் பலவகை வாசனைப் பொருள்களைப் பிறநாடுகளிலிருந்து பெற்றனர் என்பதுடன், தாமும் செய்வதில் சிறந்து விளங்கினர் என்பதை நன்கு உணரலாம். இவ்வாறு பலவகைத் தொழில்களில் சிறப்புற்றிருந்த புகாரைப் புலவர்கள் புகழ்ந்ததில் வியப்பு ஒன்றுமில்லை.

# 10. கற்புடை மகளிர்

ஒரு நாடு வளப்பமுற்றுத் தழைக்க அந்நாட்டில் மாதம் மும்மாரி பொழிய வேண்டும் என்று முன்னோர் கூறுவர். ஒரு நாட்டை அரசாளும் அரசனுடைய செங்கோலின் பொருட்டாக ஒரு மழையும், அந்நாட்டில் அந்தணர் செய்யும் யாகத்தின் பொருட்டாக ஒரு மழையும், அந் நாட்டுக் காரிகையரின் கற்பின் பொருட்டாக ஒரு மழையும் ஆக மாதம் மும்மழை பொழியும் என்பது பழந் தமிழர் கோட்பாடு ஆகும்.

'ஒரு அரசன், அறக்கடவுளே நின்று அரசு செலுத்தியது போல் அரசாட்சி செய்து செங்கோலின் கண்ணாக இருந்து, குடிகள் முறை வேண்டிய பொழுது அவர்கள் காட்சிக்கு எளியனாக இருந்தால் அவன் மழை பெய்யுமாறு விரும்பும் பொழுதெல்லாம் மழை பெய்யும்' என்று புறநானூறு கூறுகிறது. தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்,

> "தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை"

என்று கூறியுள்ளார். ஒரு பெண் பிற தெய்வங்களைத் தொழாமல், தன் கணவனையே கடவுளாகக் கருதி, வணங்கி ஒழுகுவாளாயின், அவள் பெய் என்ற அளவில் மழைபெய்யும் என்பது இக்குறட்பாவின் கருத்தாகும். இவ்வாறாக அரசர் செங்கோலின் பொருட்டும், பெண்டிரின் கற்பின் பொருட்டும் மழை பெய்யும் செய்திகள் சங்க இலக்கியத்தில் பலவிடங்களில் காணக்கிடக்கின்றன.

காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பை விளக்கும் இளங்கோவடிகளும், சாத்தனாரும் அங்கு வாழ்ந்த கற்புடை மகளிர் பலருடைய வரலாறுகளைக் கூறுகின்றனர். புகாரின் வளப்பத்திற்கு அம் மகளிரின் கற்பே காரணமாகும் என்று அவர்கள் கருதி இருக்கக்கூடும். இவ்வரலாறுகளின் பொருத்தங்களை நாம் ஆராய வேண்டுவதில்லை. அவை நிகழ்ந்திருக்கக் கூடுமோ என்றும் ஐயுற வேண்டுவதில்லை. அவற்றினிடையே பதிந்து கிடக்கும் கருத்துக்களையும், அவற்றினால் புலப்படும் பண்டைப் பெண்களின் இயல்புகளையுமே நாம் அறிந்து மகிழவேண்டும்.

கண்ணகி மதுரையில் பாண்டியனிடம்சென்று தன் கணவனுக்கு அவனிழைத்த கொடுமையை எடுத்துக் கூறி வழக்குரைத்தாள். அவ்வளவில் பாண்டியன் தன்னையறியாமல் கொடுங்கோல் நிகழ்ந்தமையை அறிந்து, மயங்கி வீழ்ந்து இறந்தான். அவனது மனைவியாகிய கோப்பெருந்தேவி நடுங்கிக் கண்ணகியின் காலில் வீழ்ந்தாள். அப்பொழுது கண்ணகி கோப்பெருந்தேவியினிடம் காவிரிப்பூம் பட்டினத்தில் கற்புடைப் பெண்டிர் பலர் வாழ்ந்ததை எடுத்துக் கூறி, அத்தகைய புகழ்பெற்ற புகாரில் தான் பிறந்தவள் என்று குறிப்பிடுகின்றாள். இத்தகைய சந்தர்ப்பத்தில் இளங்கோவடிகள் புகாரின் கற்புடைப் பெண்டிரின் வரலாறுகளைக் குறிப்பிடுகின்றார்.

''வன்னி மரமும் மடைப்பளியும் சான்றாக
முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள்''

என்று ஒரு கற்புடைப் பெண் சுட்டப்படுகின்றாள். இவ்வரலாறு திருவிளையாடற் புராணத்துள் "வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்" என்ற பகுதியுள் குறிப்பிடப்படுகின்றது. அவ்வரலாறு வருமாறு:—

சோழ நாட்டைச் சார்ந்த ஓர் பட்டினத்தில் செல்வத்திற் சிறந்த வணிகனொருவன் தன் மனையாளுடன் இல்லறம் நடாத்தி வந்தான். அவன் பலநாட்கள் மகவின்றித் தான தருமங்கள் பல செய்து வந்தான். பின்னர் அவனுக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. அப்பெண் பருவம் எய்திய காலையில் அவன் அவளைத் தன் மருமகனுக்கே மணம் செய்து கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்தான். அம்மருகன் மதுரையில் வாழ்பவன்; முதல் மணம் முடித்தவன். ஆயினும் வணிகன் அம் மருகனே தன் மகளை மணக்கும் முறையை உடையவன் என்று ஊரினர்யாவரும் அறியுமாறு சொல்லியிருந்தான். ஆயின் ஊழ்வினைப் பயனால் அவ்வணிகன் இறக்கவே அவனது மனையாளும் உடனுயிர் நீத்தாள். அவனது செல்வமகள் தனித்திருந்தாள்.

தன் மாமன் இறந்த செய்தியை உணர்ந்த மருகன் மதுரையிலிருந்து வந்து தன் மாமன் மகளை அழைத்துக்கொண்டு செல்லத் தொடங்கினான். மதுரையில் பலரும் அறிய அவளை இரண்டாம் மனையாளாக மணம் முடிக்க அவன் துணிந்திருந்தான். இவ்வாறு சென்ற அவ்விருவரும் வழியில் திருப்புறம்பயத்துக் கோயிலில் இரவு தங்கி இருந்தனர். அக்கோயிலின்

படியில் தலைவைத்து அவ் வணிகன் துயின்றான். அது பொழுது ஒரு அரவு அவனைத் தீண்டியது. உடனே அவன் விடந்தலைக்கொண்டு இறந்தான். வணிகக் கன்னி பலவாறு அழுது புலம்பினாள்.

அது காலையில் அவ்வூர்க்குத் திருஞானசம்பந்தப் பெருமான் எழுந்தளியிருந்தார். அவர் இக் கன்னியின் கரையற்ற துயரைக் கண்டார்; உளங்கரைந்தார்; தீஞ்சுவைப் பதிகம் பாடினார். அவரது அருள் நோக்கால் விடந்தீண்டியிறந்த வணிகன் உயிர்பெற்று எழுந்தான். வணிகனும், கன்னியும் சம்பந்தரது பாதங்களை வணங்கினர். அவர் அவ்விருவரையும் அவ்விடத்திலேயே மண முடித்துக் கொண்டு செல்லுமாறு பணித்தார். அவ் வணிகன் தன் உறவினரும், வேறு சான்றுமின்றி மணமுடித்துக் கொள்ளத் தயங்கினான். அது கண்ட சம்பந்தர் அக்கோயிலிலிருந்த வன்னி மரம், கிணறு, இலிங்கம் ஆகிய மூன்றையும் சான்றாக நிறுத்தி அவர்கள் மணத்தை முடித்தார்.

பின்னர் அவ்வணிகன் தன் புது மனையாளுடன் மதுரை போய்த் தன் மூத்த மனையாளிடம் அவளைச் சேர்த்து அவ்விருவருடன் இல்லறம் நடத்தினான். முதல் மனைவிக்குச் சில மைந்தர்கள் இருந்தனர். இளையாளுக்கு ஒரு மகன் பிறந்தான். அக்குழந்தைகள் வளர்ந்து வந்தன. ஒரு நாள் இளையாள் மகனும், மூத்தாள் சிறுவர்களும் விளையாடும் பொழுது அவர்களிடையே சிறு பிணக்குத் தோன்றியது. அது காரணமாக இளையாளுக்கும், மூத்தாளுக்கும் பூசல்தோன்றி முற்றியது. மூத்

தான் இளையாளை இகழ்ந்தாள். வணிகன் இளைய வளை முறைப்படி மணக்கவில்லை என்றும், மணம் நிகழ்ந்ததற்குச் சான்று இல்லை என்றும் மூத்தாள் சுட்டிக் காட்டி இளையவளை இகழ்ந்து நகையாடி னாள். அதனை இளையாள் பொறாது, "என் திரு மணம் நிகழ்ந்ததற்கு வன்னியும், கிணறும், இலிங் கமும் சான்றுகளாக நின்றன" என்றாள். அது கேட்ட மூத்தாள் மேலும் நகைத்தாள் அயலில் இருந்தோரும் நகையாடினர்.

மூத்தாளின் இழிவுரையை இளையாளால் பொறுக்க இயலவில்லை. பலவாறு இரங்கிப் புலம்பி ஈசனை வேண்டினாள். இறைவன் அவளது கற்பினை உலகினருக்குப் புலப்படுத்த விரும்பி, அவள் வேண்டுகோளின் படியே வன்னி, கிணறு, இலிங்கம் ஆகிய அம் மூன்று சான்றுகளையும், மதுரைக் கோயிலுக்கு அழைத்தார். அவற்றைக் கண்ட மூத்தாளும், உறவினரும் இளையவளுடைய கற்பின் திறத்தைப் புகழ்ந்தனர்.

இவ் வரலாற்றைப் பெரிய புராணம் வேறு விதமாகக் கூறுகின்றது. சிலப்பதிகாரக் காலத் திற்குப் பிறகு ஞானசம்பந்தர் வாழ்ந்தார். ஞான சம்பந்தர் செய்த அற்புதச் செய்தியைச் சிலப்பதிகாரம் எவ்வாறு சுட்டும் என்று சிலருக்கு ஐயம் நிகழலாம். ஆயின் சிலப்பதிகாரக் காலத்தில் நிகழ்ந்ததையும் ஞானசம்பந்தர் காலத்தில்நிகழ்ந் ததையும் மக்கள் ஒன்றாகப் பொருத்திவிட்டனர் என்று கொள்ளுதல் வேண்டும். மடைப்பள்ளி யைச் சான்றாக அழைத்தாள் என்று இளங்கோ வடிகள் கூறுகின்றார். மடைப்பள்ளியில் கிணறும்,

இலிங்கமும் அடங்கியிருப்பதாக நாம் கொள்ள லாம். திருப்புறம்பயத்திலுள்ள சிவலிங்கப் பெருமானுக்கு "ஸ்ரீ சாட்சிநாதர்" என்ற திருப்பெயர் அமைந்துள்ளது இவ்வரலாற்றை வலியுறுத்தும்.

தனக்குத் திருமணம் முறைப்படி நிகழ்ந்ததற்குச் சான்று பகர வன்னி மரத்தையும், மடைப்பள்ளியையும் அழைத்து முன்னிறுத்திய வணிகக் கன்னி பிறந்த இடம் பூம்புகார்ப் பட்டினம் அன்றோ? அத்தகைய பூம்புகாரில் தானும் பிறந்ததைக் கண்ணகி தன் பெருந் துயரத்தினிடையிலும் பெருமையுடன் பேசுகின்றாள்.

காவிரிப்பூம் பட்டினத்தின் காவிரிக் கரையில் சிறு மகளிர் பலர் சிற்றில் இழைத்து விளையாடினர். மணலில் சிறு வீடுகட்டி, சிறு மகளிர் விளையாடுதல் இயல்பு. அவ்வாறே ஒரு நாள் மாலைப் பொழுதில் சில பெண்கள் விளையாடுங்கால், ஒவ்வொருவரும் காவிரியின் மணலினால் ஒவ்வோர் சிறு வீடு கட்டினர். அப்பொழுது ஒரு பெண் தான் அமைத்த சிறு வீட்டில் மண்ணினால் ஒரு சிறு பாவையை அமைத்தாள். ஏனைப் பெண்டிர் அம் மணற் பாவையை நோக்கி அப் பாவையே அப் பெண்ணின் கணவன் என்று விளையாட்டாகக் கூறினர். அப்பேதையோ அதனை உண்மை என்று நம்பினாள். அப் பாவையைத் தன் கணவனே என்று எண்ணினாள்; அவ்விடத்தை விட்டு நீங்கினாளில்லை; காவிரியின் அலை வந்து அதனை அழித்துவிடா வண்ணம் அதையே பாது காத்து நின்றாள். அச் சிறு பெண்ணுக்கு அப்

பேதைப் பருவத்திலேயே கணவன் என்று சொல்லிய வளவில் அத்துணைக் கற்பும், கணவனிடம் அன்பும் உண்டாயின. இயல்பாக அப் பெண்ணினிடம் கற்பு அமைந்திருந்த செய்தியையே இளங்கோவடிகள் கண்ணகியின் வாயிலாகப் புகழ்கின்றார்.

புகாரைத் தலை நகரமாகக் கொண்டு அரசாண்ட சோழ மன்னர்களில் சிறந்தவன் கரிகால் வளவனுவான். கரிகாலன் வடநாட்டிலிருந்து கொற்றப் பந்தர், பட்டி மண்டபம், தோரண வாயில் ஆகிய மூன்றையும் கொண்டு வந்து காவிரிப்பூம் பட்டினத்தில் ஓர் மண்டபத்தே நிறுத்திய செய்தியும், அவன் இமயத்தில் புலிபொறித்த செய்தியும் முன்னரே குறிக்கப்பட்டன. அவனுக்கு மகளாக வாய்ந்தவர் ஆதி மந்தியார் என்ற பெயர் வாய்ந்த நல்லிசைப் புலமை மெல்லியலார் ஆவார். அவ் வம்மையார் நிறைந்த புலமையும், சிறந்த அழகும் பெற்றிருந்தார். ஆதிமந்தியாருக்குச் சேர மன்னனுகிய ஆட்டனத்தி என்பவன் கணவனுக அமைந்தான். அவன் அத்தி என்றும் நூல்களில் அழைக்கப்படுகின்றுன். அவன் ஆடுதலில் சிறப்புப் பெற்றிருந்தமையின் ஆட்டன் அத்தி எனப் பெயர் பெற்றுன் போலும் என்று உரையாசிரியர்கள் கருதுகின்றனர்.

ஆதி மந்தியார் ஒரு நாள் தன் கணவனுகிய ஆட்டனத்தியுடன் நீர் விழாவின் பொருட்டுக் கழார் என்ற ஊருக்குச் சென்றுர். அங்குக் காவிரி யாறு அழகுடன் பரந்து ஓடினமையின் அவர்கள் அவ்விடத்திற்குச் சென்றனர். காவிரித் துறையில்

ஆதிமந்தியும், அத்தியும் நீரில் முழுகி விளையாடினர். அது காலையில் காவிரி வெள்ளம் அத்தியைக் கவர்ந்து சென்றது. காவிரியின் வெள்ளத்தில் ஆழ்ந்து கையற்றுச் செல்லும் தன் கணவனைக் காப்பாற்ற ஆதிமந்தியாரால் முடியவில்லை; காவிரிக்கரை வழியே சென்றார்.

காவிரிக் கரை வழியே கணவனைத் தேடிச் சென்ற ஆதிமந்தியார் பலவாறு புலம்பினார். காவிரி வெள்ளம் அத்தியை எவ்விடத்திலேனும் கரையில் சேர்த்திருக்கும் என்பது அவரது நினைவு. ஆகவே பல இடங்களில் அத்தியைத் தேடினார். அத்தி ஆடுதலில் சிறந்தவனல்லனோ! எனவே மள்ளர்கள் கூடி எடுத்த விழாவில் அவன் கலந்துள்ளானோ என்று விழாக்கள் நடைபெறும் இடங்களிலெல்லாம் ஆதிமந்தியார் தேடி அலைந்தார்; பெண்டிர் ஒருங்கு கூடித் துணங்கை ஆடும் இடங்களிலும் பார்த்தார். எங்கும் அத்தியைக் காணவில்லை. எதிரில் கண்டவர்களிடம் ஆதிமந்தியார் தன் கணவனது அங்க அடையாளங்களைக் கூறி வினவினார். அவனது இயல்புகளைப் பலரிடம் பகர்ந்து அலைந்தார். இவ்வாறே புலம்பிச் சென்று அவர் கடற்கரையை அடைந்தார்.

காவிரியின் வெள்ளம் அத்தியை ஈர்த்துச் சென்று கடலில் விடுத்தது. ஆயின் கற்புடைய பெண்ணாகிய ஆதிமந்தியின் காதலனைக் கடல் தன்னகத்தே அடக்கிக் கொள்ள விரும்பவில்லை. ஆதிமந்தியின் கற்பிற்குக் கடல் அஞ்சியது. எனவே கடல் தன் அலைக்கரத்தால் அத்தியைக் கரையில் சேர்த்துவிட்டது. அது பொழுது அங்கு

மருதி என்ற ஒருத்தி கடலில் நீராடிக்கொண்டிருந்தாள். அவள் அத்தி கரையில் ஒதுக்கப்பட்டதை அறிந்து எடுத்து உபசரித்து அவனை ஆதிமந்தியாரிடம் சேர்த்துப் புகழ் பெற்றாள்.

சங்க நூல்களில் கணவனைப் பிரிந்த காரிகையாரின் துயரத்திற்கு உவமையாக ஆதி மந்தியார் அத்தியைப் பிரிந்து அரற்றிய செய்தியே கூறப்பட்டுள்ளது. கடல் அத்தியின் உயிரைக் கவராது கரை சேர்த்தது ஆதிமந்தியாரின் கற்பின் சிறப்பினாலேயே என்பது இளங்கோவடிகளின் கருத்தாகும். அத்தகைய ஆதி மந்தியார் பிறந்த புகாரில் யானும் பிறந்தேன் என்று கண்ணகி பெருமிதத்துடன் பேசியதாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து வணிகர்கள் பலர் கலந்தருஞ் செல்வத்தின் பொருட்டு வேறு நாடு சென்றது முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு ஒரு வணிகன் மரக்கலம் ஏறி வாணிகம்செய்ய வேறு நாடு சென்றான். அவனது மனைவி தன் கணவன் வரும் வரையில் தன் இயற்கை உருவுடன் இருக்க இசைந்தாளில்லை. கடற்கரைச் சோலையில் கல் உருவுடன் நின்றாள். கற்பின் வன்மையாலேயே அவள் கல்லுருப் பெற்றாள். கல்லுருவுடன் நின்ற அப்பாவை கடலில் வரும் கலன்களை நோக்கியவாறு இருந்தனள்; தன் கணவன் வந்தவுடன் தனது கல்லுருவை நீத்துப் பழைய எழிலுருவம் பெற்றாள்.

புகாரில் வாழ்ந்த ஒருவனுக்கு இரு மனைவியர் இருந்தனர். அவர்களுள் ஒருத்தி மழையை

வேண்டும் பொழுது பெய்விக்கும் கற்பு வாய்ந்த வள். ஒருநாள் அவளது மாற்றாளின் குழந்தை ஒன்று கிணற்றில் விழுந்து விட்டது. அக்கற் புடைய காரிகை தனக்குப் பழிவருமே என்று எண் ணித் தன் குழந்தையையும் கிணற்றில் தள்ளிவிட் டாள். ஆயின் அவளது கற்பின் சிறப்பினால் கிணற் றில் விழுந்த இரு குழவிகளும் ஊறு ஒன்றுமின்றி நீரின் மேல் மிதத்தன. பின்பு அக்குழந்தைகள் இரண்டும் கிணற்றிலிருந்து வெளியில் எடுக்கப் பட்டன. இவ்வாறு பெண்டிரின் கற்புக்குக் காலனும் அஞ்சி உயிர் கவர்வதை ஒழித்தான். அத்தகைய கற்பு வாய்ந்த பெண் பிறந்த நகரம் புகார்ப் பட்டினமாகும்.

அந்நகரில் மற்றொரு கற்புடைய பெண்ணின் கணவன் வெளியூர் சென்றிருந்தான். அவள் தன் கணவன் வரும் வரையில் தன் இயற்கை அழகு டன் இலங்குதல் தகாது என்று எண்ணினாள். தன் அழகுடைய முகத்தைப் பிறர் காணுதலும் தீது என்று அவள் கருதினாள். எனவே அவள் தன் கற்பின் வன்மையால் கணவன் வரும் வரை யில் தன் முகத்தைக் குரங்கு முகமாக மாற்றிக் கொண்டாள். கணவன் வந்த பின் அந் நங்கை தன் பழைய முகத்தை வருவித்துக் கொண்டாள்.

புகாரில் காவிரித் துறையில் சிறு பெண்டிர் சிற்றில் இழைத்து விளையாடுதல் உண்டு என்பது முன்பு குறிப்பிடப் பட்டது. அவ்வாறு இரு பெண்கள் ஒரு நாள் சிற்றில் கட்டி விளையாடி னர். அவர்கள் இளமைப் பருவத்தினர். ஆத லின் ஆய்ந்து பாராது பலவற்றைப் பேசினர்.

அவர்களுள் ஒருத்தி மற்றொருத்தியை நோக்கி, 'உனக்கு ஒருமகன் பிறந்த பின், எனக்கு ஒரு மகள் பிறந்தால் உன் மகனுக்கு என்மகளை மணம் முடித்துக் கொடுக்கிறேன். இக்காவிரித் தெய்வம் அறிய யான் சூளுரைக்கின்றேன்' என்றாள். அது கேட்ட மற்றொருத்தியும் அவ்வேற்பாட்டிற்கு இசைந்தாள். இவ்வாறு இவர்கள் நட்புடன் பேசி வீடு சேர்ந்தனர்.

ஆண்டுகள் கழிந்தன. அவர்கள் பேசிக் கொண்டவாறே சூளுரைத்தவளுக்கு ஒரு மகளும் மற்றொருத்திக்கு ஒரு மகனும் பிறந்தனர். அம் மகள் மிக அழகுடன் விளங்கினாள். ஆயின் ஊழ்வினைப் பயனால் மற்றொருத்தியின் மகன் முடவனாக இருந்தான். அவ்விருவரும் மணப்பருவமடைந்தனர். அது காலையில் சூளுரைத்தவள் தன் கணவனிடம் ஒரு நாள், 'யான் சிறுமியாய் இருக்குங் காலையில் எனக்கு மகள் பிறந்தால் என் தோழியின் மகனுக்கே மணமுடிப்பதாக அறியாமையால் சூளுரைத்தேன். ஆயின் அவன் முடவனாயுள்ளானே! என் செய்வேன்? எனது தோழி தன் மகனுக்கு நம் மகளைத் தவறாது மணம் முடித்துத் தருவோம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றாளே. இதை எண்ணி என் மனம் துன்புறுகிறது' என்று தாய் கூறினாள். தனது இளமையில் செய்த சூளுரை தன் தந்தையிடம் கூறி வருந்தியதை அம்மகள் மறைவிலிருந்து கேட்டனள். தன் தாய் தன்னை அம்மகனுக்கு மணம் முடிப்பதாக உறுதியளித்தமையின் அவனே தனக்குக் கணவனாவான் என்று அவள் கருதினாள்.

கணவன் என்று அவன் முடிவு செய்த பின் மூட வன் என்று தள்ளுதல் தகாது என்று உறுதி கொண்டாள்.

விரைவில் அவள் புதுப் புடவையை உடுத்தி ளுள்; கூந்தலை வாரி முடித்தாள்; கொடுப்பாரும், அடுப்பாரும் இன்றித் தானே முற்பட்டு அம்மூட மகன் இருந்த இடம் சென்ருள். அவனைத் தன் கணவனுகக் கொண்டாள். அது மட்டுமோ? அவனை வணங்கித் தன் தலையில் சுமந்தாள். அச் செய்கையைக் கண்ட புகார் மக்கள் அவளது கற் பின் செவ்வியைப் புகழ்ந்தனர்.

மேற் சுட்டிய கற்புடை மகளிர் எழுவர் புகா ரில் வாழ்ந்தனர் என்றும், அத்தகைய மகளிர் பிறந்த புகாரில் தானும் பிறந்ததாகவும் கண்ணகி கோப்பெருந் தேவிக்குக் கூறுகின்ருள். இவ் வெழுவர் வரலாறுகளும் பட்டினத்துப் பிள்ளை யார் புராணத்தின் பூம்புகார்ச் சருக்கத்தில் குறிப் பிடப்பட்டுள்ளன.

இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத் தால் மூன்று உண்மைகளை வெளிப்படுத்துகின் ருர். அவை செங்கோல் தவறிய கொடிய அரசர் களை அறக்கடவுளே கூற்ருக நின்று ஒறுக்கும்; கற்புடைய பெண்டிரை மக்களையன்றித் தேவரும் முனிவரும் ஏத்துவர்; முன் செய்த தீவினை உருத்து வந்து தன் பயனை நுகர்விக்கும் என்பன ஆகும். இம்மூன்று உண்மைகளையும் இளங் கோவடிகள் நூலில் இடம் வாய்ந்த பொழுதெல் லாம் எடுத்துக்காட்டுகின்ருர். அவற்றுள் சிறப் பாக பெண்டிரின் கற்பை எடுத்துக்காட்டி அவர்

போற்றுகின்றார். எனவே புகாரில் பிறந்த கண்ணகியினது கற்பின் உயர்வை விளக்க வேண்டி, அப்புகாரில் வாழ்ந்த ஏனைய கற்புடைய பெண்டிரின் வரலாறுகளையும் சமயம் வாய்த்த பொழுது சுட்டிக் காட்டுகின்றார். அந்நிலையிலேயே மேற்காட்டிய ஏழு மங்கையரின் வரலாறுகள் நமக்குத் தெரிகின்றன. இவ்வரலாறுகள் பழந் தமிழ் இலக்கியங்களில் பல விடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மணிமேகலை நூலின் வாயிலாகவும் புகாரில் சில கற்புடைய பெண்கள் சிறப்புப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. மணிமேகலை தனக்குக் கிடைத்த அமுதசுரபியுடன் காவிரிப்பூம் பட்டினம் வந்ததும், அந்நகரில் வாழ்ந்த கற்புடைய பெண்களில் சிறந்த ஆதிரை அப்பாத்திரத்தில் பிச்சையிட்டதும் முன்னர்க் கூறப்பட்டன. அவ்வாதிரை என்பாள் பிற கற்புடைய பெண்டிரும் கை தொழும் தகைமை பெற்று விளங்கினாள் என்று மணிமேகலை ஆசிரியராகிய சாத்தனார் கூறுகின்றார்.

ஆதிரையின் கணவன் சாதுவன் எனப்படுவான். அவன் தனக்கிருந்த பெருஞ் செல்வத்தைக் கூடா ஒழுக்கத்தினால் அழித்தான். பின்னர் அவன் அறிவு தெளிவுற்றது. தான் இழந்த பொருள்களை மீண்டும் சேர்க்க விழைந்த அவன் வாணிகஞ் செய்யும் பொருட்டு வேறுநாடு செல்ல மரக்கலம் ஏறிச்சென்றான். ஆயின் அம்மரக்கலம் நடுக் கடலில் ஓர் இரவு பெருங் காற்றினால் அலைப்புண்டு உடைந்தது. அம்மரக்கலத்திற் சென்ற

பலர் கடலில் வீழ்ந்து இறந்தனர். ஒரு சிலர் நீந்திப் பிழைத்து ஒருவாறு புகார் திரும்பினர். சாதுவனோ ஒடிந்த மரத்துண்டு ஒன்றைப் பற்றி நீரில் கிடந்தான். அவன் கடவுளின் அருளால் அலைகளால் தள்ளப்பட்டு நாகர்கள் வாழ்ந்த ஓர் தீவைச் சேர்ந்தனன்.

இதற்கிடையில் உடைந்த மரக்கலத்திலிருந்து தப்பிப் பிழைத்துப் புகார் புகுந்தவர்கள் ஏனைய வணிகர்களுடன் சாதுவன் இறந்து விட்டான் என்று ஆதிரையிடம் கூறினர். ஆதிரை அது கேட்டுத் தானும் உடனுயிர் துறக்கத் துணிந்தாள் : அவ்வூரின் சுடுகாட்டில் ஈமத்தீயை மூட்டினாள் ; 'என் கணவன் சென்ற இடத்திற்கு யானும் செல்லக் கடவேனாக' என்று கூறித் தீயிற் பாய்ந்தாள். ஆயின் கற்புடைய அம் மங்கையைத் தீயும் சுட அஞ்சியது. எனவே அவள் ஆடையில் தீப்பிடிக்கவில்லை. கூந்தலும் கருகவில்லை. அவள் அணிந்த சாந்தமும், சூடிய மாலையும் நிறம் மாறவில்லை. தாமரை மலரில் தங்கிய திருமகளைப்போல் ஆதிரை அவ்வீமத்தீயின் இடையில் நின்றாள்.

அது கண்ட ஆதிரை, "தீயும் என்னைக் கொல்ல மறுக்கின்றதே ! அத்துணைத் தீவினையை யான் செய்திருக்கின்றேனே ! இனி யாது செய்வேன்" என்று கவலையுற்றாள். அதுபோழ்து ஆங்கு ஆசரீரி வாக்கு அந்தரத்தே எழுந்தது. "ஆதிரையே ! கேள். உன் கணவன் இறக்கவில்லை. அவன் மரக்கலம் உடைந்தவுடன் ஒடிந்த மரத்துண்டு ஒன்றைப் பற்றித் திரையின் உதவி

யால் நாகர் வாழும் தீவை அடைந்துளான். அவன் சின்னாட்களில் சந்திரதத்தன் என்னும் ஒரு வணிகனின் கலத்தில் ஏறி இங்கு வந்து சேர்வான். நின் பெருந்துன்பத்தை யொழித்து இன்ப முற்றிருப்பாய்" என்று அசரீரி கூறியது. இதனைக் கேட்ட ஆதிரை அழுதுயர் நீங்கினாள்; குளத்தில் முழுகித் திரும்பும் ஒருத்தியைப் போலக் கவலையின்றித் தன் மனையை அடைந்தாள். கணவன் விரைவில் தன்னிடம் திரும்பி வரவேண்டும் என்று கருதிப் பல புண்ணியங்களைச் செய்து வந்தாள்.

நாகர்களின் தீவை அடைந்த சாதுவனும் அவர்களிடமிருந்து பல செல்வங்களைப் பெற்று, சில நாளில் சந்திரதத்தன் என்ற வணிகனின் கப்பலில் புகார் சேர்ந்தான். பின்னர் ஆதிரையும், சாதுவனும சேர்ந்து பல தான தருமங்களைச் செய்தனர். அத்தகைய ஆதிரையே மணிமேகலையின் கையிலிருந்த அமுத சுரபியின் அகன் சுரை நிறையுமாறு அன்னம் இட்டாள். அவ்வாறு இடும் பொழுது "பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக" எனக் கூறினாள். அதன் சிறப்பினாலேயே அவ்வமுத சுரபியினின்றும் பின்னர் எடுக்க எடுக்க உணவு குறையாமல் வளர்ந்தது. இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆதிரையே யன்றி அந்நகரில் வேறு பல கற்புடைய பெண்டிர் வாழ்ந்ததாக மணிமேகலை கூறுகின்றது. அவற்றை விரிப்பில் பெருகும்.

புகார் சிறப்புற்று விளங்கியது அந் நகரில் வாழ்ந்த பெண்டிரின் கற்பின் சிறப்பினாலேயே

என்பது இளங்கோவடிகள், சாத்தனார் ஆகிய ஆசிரியர்களின் கருத்தாகும். அவ்வாறு சிறப்புற்ற புகார் பன் மடங்கு அதிகமாக உயருமாறு செய்தவள் கண்ணகி யாவாள். கண்ணகியின் இயல்புகள் யாவும் சிலப்பதிகாரத்தில் பரக்கக் கூறப்பட்டுள்ளன. கணவனின் கூடாவொழுக்கத்தைக் கண்டு அவள் அவனை வெறுத்தாளில்லை. கணவன் விரைவில் வரவேண்டும் என்று பிற கடவுளையும் வணங்கினாளில்லை. அவளது சீரிய கற்பு அல்லது மறக் கற்பு அவளைத் தேவரும் வணங்கும்படியாகச் செய்தது. மண்ணவர் அவளைத் தெய்வமாகப் பரவினர். இத்தகைய கற்புத் தெய்வத்தைத் தோற்றுவித்த பெருமை புகார்க்கே உரியது. அவள் கற்பு வெளிப்பட்டது பாண்டி நாட்டில் ஆகும். அவள் தெய்வமாகப் போற்றப் பட்டது சேர நாட்டிலாகும். ஆயின் அப்புகழ் யாவும் அவளை உலகுக்கு அளித்த புகாரையே சாரும்.

# 11. முடிவு

இதுகாறும் யாம் கூறிப் போந்தவற்றி னின்றும் புகாரைப் பற்றிய பல செய்திகளை உணர்ந்தோம். அங்கு நிகழ்ந்த இரு வரலாறு களைக் கூறும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு நூல்களாலுமே புகாரைப் பற்றிய பல செய்திகள் அறியக் கிடக்கின்றன. அவற்றை எழுதிய ஆசிரியர்கள் அவ்வரலாறுகள் நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்தனர். அவர்களுள் ஒருவராகிய இளங்கோவடிகள் ஒரு அரசத் துறவி; சேர வம் சத்தில் தோன்றியவர். எனினும் தனது அண்ண னாகிய செங்குட்டுவனின் மனக் கவலையை நீக்கும் பொருட்டு இளமையிலேயே துறவு பூண்டனர். அத்தகைய அடிகள் விருப்பு வெறுப்பு அற்று இருந்தார். அத்தன்மையை உணர்ந்தே சாத்த னார், முடிமன்னர் மூவருக்கும் உரிய சிலப்பதி காரக் கதையைப் பாடுமாறு இளங்கோவடிகளை வேண்டினார்.

முற்றத் துறந்த இளவரசராகிய அடிகள் ஒரு வரே சிலப்பதிகாரத்தைப் பாடும் தகுதிவாய்ந் தவர் என்று சாத்தனார் கருதியது ஏன்? கண்ணகி புகாரில் பிறந்து, மதுரையில் வழக்குரைத்துத் தன் கற்பின் வன்மையை வெளிப்படுத்தி, சேர நாட்டில் தேவர்களால் சிறப்பிக்கப்பட்டாள். ஆகவே சோழநாட்டில் தொடங்கிய வரலாறு பாண்டிய நாட்டில் வளர்ந்து சேரநாட்டில் முடி வுற்றது. எனவே இவ்வரலாற்றைப் பாடுகின்

றவர் சேர, சோழ, பாண்டியர் மூவரையும் காய்தல் உவத்தல் இன்றிப் புகழ்ந்து பாட வேண்டும். அவ்வாறு பாடுதற்கு ஏற்றவர் இளங்கோவடிகள் ஒருவரேயாவார். அதற்கேற்ப அவர் நடுவு நிலைமையிலிருந்து முடி மன்னர் மூவரின் சிறப்பையும், அவர்களுடைய தலைநகரங்களின் சிறப்பையும், செங்கோலின் உயர்வையும் பாடுகின்றார். அதன் பயனாகத்தான் நமக்குப் புகாரைப் பற்றிய பல செய்திகள் கிடைத்தன. புகாரினது அமைப்பும், வாணிகச் சிறப்பும், கைத்தொழிற் பெருமையும் நாகரிகத்தில் சிறந்த ஒரு நாட்டையே நம் கண்முன் தோற்றுவிக்கின்றன.

அந் நகரத்தில் பல கற்புடைப் பெண்டிர் வாழ்ந்ததாகக் கூறப்பட்டது. அவர்களுடைய வரலாறுகள் நமக்கு வியப்பையே தருகின்றன. தற்கால விஞ்ஞான உலகத்தில் பல உண்மைகளை ஆராய்ந்து உணர்ந்தவர்கள் அவை உண்மையில் நிகழ்ந்திருக்கக் கூடுமோ என்று ஐயுறுவர். அஃதியற்கையேயாகும். எனினும் முற்றத் துறந்து, விருப்பு, வெறுப்பற்ற முனிவராய்த் திகழ்ந்த இளங்கோவடிகள் அவ் வரலாறுகளைக் குறிப்பிடுகின்றார். அவர் தம் காலத்தில் நிகழ்ந்த பலவற்றையே பாடுகின்றார். அவ்வாறு பாடுங்கால் புலவர்களுக்கு இயல்பான உயர்வு நவிற்சி சிறிது இடையில் புகுந்திருத்தலும் கூடும். எனவே அவ் வரலாறுகளை ஆராய்ந்து உண்மை உணர்தல் அறிஞர் கடமையாகும்.

சிறந்த அரசர்கள் பலர் புகாரைத் தலைநகராகக் கொண்டு அரசு செலுத்தியிருக்கின்றனர். அவர்

களுள் மிகச் சிறந்தவனாகக் கரிகால் வளவனைக் குறிப்பிடலாம். அவன் இமயத்தில் புலி பொறித்த செய்தியும், வட நாட்டில் யாத்திரை செய்ததும், கொற்றப் பந்தர், பட்டிமண்டபம், வாயில் தோரணம் ஆகியவற்றைப் புகாரில் ஒரு மண்டபத்தே நிறுத்தியதும் கூறப்பட்டன. அவன் இளைஞனாயிருந்த காலையில் நரை முடித்துச் சிக்கலான ஒரு வழக்கைத் தீர்த்தவன் என்று நூல்கள் அவனைப் புகழ்கின்றன. அவன் புகாரைப் பல விதங்களில் உயரச் செய்தான் ; கடல் வாணிகத்தை உயர்ந்த முறையில் பெருக்கினான் ; பண்டங்களில் தனது புலி முத்திரையைப் பொறித்தான். அவனது மகளாகிய ஆதி மந்தியாரின் கற்பின் பொற்பும் கூறப்பட்டது. எனவே புகாருக்குப் புகழ் அளித்தவன் கரிகாலன் ஆவான். புகாரே கரிகாலனுக்கு அத்துணைப் பெருமையை அளித்தது என்றும் கூறலாம். எனவே கரிகாலனைச் சிறப்பிக்கக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற புலவர் பெருந்தகையார் அவன் மேல் 'பட்டினப் பாலை' என்ற நூலைப் பாடினார். பட்டினப்பாலையால் தன்னைப் பாராட்டிய பாவலருக்கு அரசன் பதினாயிரம் பொன்னைப் பரிசாக அளித்தான்.

புகாரில் 'இந்திர விழா' நிகழ்த்தப்பட்ட செய்தி விளங்க உரைக்கப்பட்டது. இக்காலத்தில் விழாக்கள் செய்ய முன்னிற்போர் காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழா கொண்டாடப்பட்ட முறையை ஊன்றி நோக்கவேண்டும். மக்களுக்குக் கடவுட் காதலை ஊட்டுவதன்றி, அவர்களுக்குப் பல் வகையான அறிவுரைகளைக் கூறுவதும்

அவ் விழாவின் நோக்கமாக இருந்தது. நகரைச் சுகாதார முறையில் சுத்தமாக வைத்துக் கொள்வதற்கும் அவ்விழா ஒரு காரணமாக இருந்தது. எல்லாவற்றிற்கும் தலைசிறந்ததாக மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியையும் அவ்விழா ஊட்டியது. இச்செய்தி நம்மனோர்க்குக் கரையில்லாத உவகையை அளிக்கின்றது.

அந் நகரில் பல வகையான தேவர்களுக்கும் கோயில்கள் அமைந்திருந்தன. சிவபிரான், முருகன், திருமால், பலதேவன், இந்திரன், காமன் போன்ற தெய்வங்களுக்கும், வேறு தெய்வங்களுக்கும் கோயில்கள் இருந்தன. அன்றியும் அந்நகரில் பௌத்த சமயமும், சமண சமயமும் உயர் நிலையில் இருந்தன என்று தெரிகின்றது. அவற்றுள் சிறப்பாகப் பௌத்த மதம் பலரால் கைக்கொள்ளப்பட்ட செய்தியும் நமக்குத் தெரிகின்றது.

இவ்வாறு வாணிகத்திலும், கைத்தொழிலிலும், நாகரிகத்திலும், நகரமைப்பிலும், கலையிலும் சிறந்திருந்த காவிரிப்பூம் பட்டினத்தைக் கடல் கொண்டது என்று மணிமேகலை கூறுகின்றது. அந்நகரில் வழக்கமாகச் செய்யப்பட்டுவந்த இந்திர விழா செய்யப்படாமல் நின்றுவிட்டது. அதனாலேயே அந் நகரைக் கடல்கொண்டது. இவ்வாறு கடல்கொண்ட செய்தி மணிமேகலையில் பலவிடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மணிமேகலை சிறைப்பட்ட காலத்தில் அவளைச் சிறைவீடு செய்ய விரும்பிய சித்திராபதி இராசமாதேவியிடம் செல்கின்றாள். மணிமேகலையைச்

சிறையிலிருந்து விடுதலை செய்யவில்லை என்றால் அவளது பெயரைக் கொண்ட மணிமேகலா தெய்வம் சினங்கொண்டு நகரை அழித்துவிடும் என்றும், புகார் அழியுமாறு இந்திர சாபம் ஒன்று உண்டு என்றும் சித்திராபதி இராசமாதேவியினிடம் கூறுகின்றாள்.

மணி பல்லவம் என்ற தீவிற்கு மணிமேகலையும் ஆபுத்திரனும் வந்திருந்தகாலத்தில் அங்கிருந்த தீவதிலகை என்பவள் புகாரைக் கடல்கொண்ட செய்தியைக் குறிப்பிடுகின்றாள். அவள் மணிமேகலையினிடம் கடல் கொண்ட வரலாற்றைக் கூறுகின்றாள். அவ் வரலாறு வருமாறு:—

நாக நாட்டரசன் ஒருவனின் மகளாகிய பீலிவளை என்பவளைப் புகாரை ஆண்ட சோழ அரசன் ஒருவன் மணந்து ஒரு புதல்வனைப் பெற்றான்; பின்பு அவளை அக் குழந்தையுடன் அங்கு விடுத்துத் தன்னிருப்பிடம் வந்துசேர்ந்தான். பீலிவளை என்பவள் அப் புதல்வனுடன் மணிபல்லவம் என்ற தீவிற்குச் சென்றிருந்தாள். அதுபொழுது அங்குப் புகாரைச் சேர்ந்த கம்பளச் செட்டி என்பவன் தன் கப்பலில் வந்து சேர்ந்தான். பீலிவளை அவனிடம் அப் புதல்வனை அளித்து, அவனை அரசனிடம் சேர்க்குமாறு கூறி விடுத்தாள். ஆயின் ஊழ்வினைப் பயனால் கம்பளச் செட்டியின் கப்பல் இடை வழியில் உடைந்து வீட்டது. சிலர் பிழைத்து நீந்திச் சென்று புகார் புகுந்து அரசனிடம் புதல்வன் கடலில் உடைகலப்பட்ட செய்தியை உரைத்தனர். அரசன் அது கேட்டு வருந்தித் தன் புதல்வனைக் கடற்கரையில் தேடி

அலைந்தான். அவ் வருத்தத்தால் தன் கடமைகள் பலவற்றைச் செய்யாது ஒழித்தான். அதனால் அவ்வாண்டு புகாரில் இந்திர விழா நடைபெற வில்லை. இந்திர விழா செய்யப்படாது ஒழியவே மணிமேகலா தெய்வம் சினங்கொண்டு புகாரைக் கடல் கொள்ளுமாறு சபித்தது. கடலும் அந்நகரை மூடியது. அரசன் வேறிடம் சென்றான். குடி களும் வேறிடம் சென்றனர். இவ்வரலாறு மணி மேகலையில் மற்றோரிடத்திலும்கூட்டப்படுகின்றது.

பல்லாற்றானும் பலரால் பாராட்டப் பெற்ற புகார் இறுதியில் கடல் வயிறு புகுந்தது என்ற செய்தி நம்மைத் துயரத்தில் ஆழ்த்துகின்றது. ஆயின் இளங்கோவடிகள் அந் நகரைப் பலவித மாகப் புகழ்ந்து வாழ்த்தி யிருக்கின்றார். அவர் புகரர் நகரத்தைப் பொதிய மலைக்கும், இமய மலைக்கும் சமமாக வைத்துப் பாடுகின்றார். இமய மும் பொதியமும் என்றும் நின்று நிலை பெறுவன. அவ்வாறே புகாரும் அழியாதது என்று அவர் கூறுகின்றார். இவ்வாறு பலவிடங் களில் இளங்கோவடிகள் அந் நகரின் சிறப்பைப் புகழ்ந்து, புகார்க் காண்டத்தின் இறுதியில் முடிவாக,

> "காலை அரும்பி மலருங் கதிரவனும்
> மாலை மதியமும்போல் வாழியரோ—வேலை
> அகழால் அமைந்த அவனிக்கு மாலைப்
> புகழால் அமைந்த புகார்."

என்று அதனை வாழ்த்துகின்றார். 'கடலால் சூழப் பட்ட இவ்வுலகுக்கு மாலைபோல் புகழோடு

பொருந்திய அப்புகார், காலையில் உதித்து ஒளி விரிக்கும் சூரியனும், மாலையில் தோன்றி நிலவு தரும் மதியமும் போல் வாழ்க' என்பதே இவ் வெண்பாவின் பொருளாகும். அவர் சூரியனும், சந்திரனும் போலப் புகார் வாழ்க என்று வாழ்த்தினர். அவ்வாழ்த்துரை பொய்க்குமோ? புலவர் சொல் பொய்ப்பதும் உண்டோ? அந் நகரத்தைக் கடல் கொண்டதே யொழிய அந் நகரின் சிறப்பையும் கொண்டுவிட்டதோ? புகார் அழிந்தால் என்ன? அதன் சிறப்பு தமிழ் மக்களின் மனத்தை விட்டு அழியுமோ? அந்நகரின் அமைப்பும், சிறப்பும் தமிழ் மக்களின் உள்ளத்தைவிட்டு ஒரு பொழுதும் அகலாது. நம் மனக் கண்ணிற்கு முன் அப் புகார் என்றும் நின்று நிலவும் என்பது திண்ணமாகும்.

THE MADURA TAMIL SA